Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

புதன்கிழமை 10, செப்டெம்பர் 2025 | ஒளி: 11 கதிர்: 046 | நகரப்பதிப்பு | FREE

## "ஜனாதிபதி அனுர அனுகம்பேக்கு செல்லவேண்டும்"



ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, கச்சதீவுக்கு சென்று தென்னிந்திய நடிகர் விஜய்க்கு படம் காட்ட வேண்டிய அவசியமில்லை. உண்மையில் ஜனாதிபதி இஸ்ரேலியர்களினால் ஆக்கிரமிக்கப்படும் அறுகம் குடாவுக்கே சென்றிருக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்

தொடர்ச்சி P2



பாராளுமன்றம், பிரதமர், அமைச்சர்களின் வீடுகளை

# போராட்டக்காரர்கள் கொளுத்தினர்

### நேபாள பிரதமர் ஷர்மா ஒலி ராஜினாமா

நேபாளத்தில் அரசுக்கு எதிரான போராட்டம் இரண்டாவது நாளாக, செவ்வாய்க்கிழமை (09) நீடித்தது. அமைச்சர்களின் வீடுகள் தீ வைத்து எரிக்கப்பட்டதால் பதற்றம் நிலவுகிறது நேபாள பாராளுமன்றத்தை போராட்டக்காரர்கள் தீ வைத்து கொளுத்தினர், இந்நிலையில், அனைத்து விமானங்களையும் காத்மாண்டு விமான நிலையம் ரத்து செய்தது.

நேபாளத்தில் சமூக வலைதளங்களுக்கு தடை விதிக்கப்பட்டதை கண்டித்தும், ஊழல் நிர்வாகம், வேலையின்மை உள்ளிட்ட பிரச்னைகளை முன் வைத்து இளைஞர்கள் திங்கட்கிழமை (08) போராட்டத்தில் குதித்தனர். அப்போது, பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டில் 19 பேர் உயிரிழந்தனர். இளைஞர்கள் நடத்திய போராட்டத்தை அடுத்து இரவு சமூக ஊடகங்கள் மீதான தடை நீக்குவதாக பிரதமர் திங்கட்கிழமை (08) இரவு அறிவித்தார். துப்பாக்கிச் சூடு சம்பவத்திற்கு பொறுப்பேற்று உள்துறை அமைச்சர், வேளாண் துறை அமைச்சர் ஆகியோர் பதவி விலகினர்.

இந்நிலையில், அரசுக்கு எதிரான போராட்டம் செவ்வாய்க்கிழமையும் (09) நீடித்தது. துப்பாக்கிச் சூடு சம்பவத்திற்கு பொறுப்பேற்று பிரதமர் சர்மா ஒலியை பதவி விலகக் கோரி ஆயிரக்கணக்கான இளைஞர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். காத்மாண்டுவில் பாராளுமன்றத்துக்கு செல்லும் அனைத்து வழிகளையும் அடைத்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அங்கு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மீது கற்களை வீசி விரட்டியடித்தனர்.

மேலும் காத்மாண்டுவில் உள்ள நேபாளி காங்கிரஸ் கட்சி அலுவலகத்தை தீ வைத்து எரித்தனர். இதேபோன்று லலித்பூரில் உள்ள அமைச்சர் பிரித்வி சுபா குருங்கின் வீட்டை தீ வைத்து கொளுத்தினர். இதனைத்தொடர்ந்து முன்னாள் பிரதமர் பிரசன்டா வீடு மீதும் போராட்டக்கார்கள் தாக்குதல் நடத்தினர்.

இந்நிலையில், இளைஞர்கள் போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வரும் விதமாக அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு பிரதமர் சர்மா ஒலி அழைப்பு விடுத்துள்ளார். தற்போதைய சூழல் குறித்து அனைத்து தரப்பினருடம் பேசி வருவதாகவும், இந்த கடினமான சூழலில் மக்கள் அமைதி காக்க வேண்டும் என்றும் சர்மா ஒலி தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், காத்மாண்டுவில் உள்ள நேபாள பிரதமர் சர்மா ஒலியின் வீட்டிற்கு போராட்டக்காரர்கள் தீ வைத்தனர். இதனால் அவரது வீடு பற்றி எரிந்தது. நேபாளத்தில் சமூக வலைதளங்கள் மீதான தடை நீக்கப்பட்டபோது போராட்டம் தொடர்ந்து நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

இலங்கைக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான

## "இராஜதந்திர உறவுகளை முறித்துக் கொள்ள முடியாது"



இலங்கைக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளை முறித்துக் கொள்ள முடியாது. இஸ்ரேலுடனான சகல உறவுகளையும் இலங்கை முறித்துக் கொள்ள வேண்டும் என்று கூறுவோரின் மன நிலையை ஆராய வேண்டும் என தேசிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கௌசல்யா ஆரியரத்ன தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## கெஹலியவின் குடும்பத்துக்கே நோட்டீஸ்

நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு நோட்டிஸ் கிடைத்தவுடன் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல உள்ளிட்ட அவரின் குடும்ப அங்கத்தவர்களான ஆறு சந்தேகநபர்களுக்கு, கொழும்பு பிரதான நீதவான் அசங்க ஏஸ் போதரகம, செவ்வாய்க்கிழமை (09) உத்தரவிட்டார்.

தொடர்ச்சி P2



## பலப்பிட்டிய துப்பாக்கிச் சூடு: கொலை சந்தேக நபர் காயம்

பலப்பிட்டிய, ஹீனட்டிய வீதியின் பெட்டிவத்த பகுதியில் செவ்வாய்க்கிழமை (09) மதியம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக அம்பலாங்கொடை பொலிஸார் தெரிவித்தனர். பலப்பிட்டிய, மஹலதுவ பிரதேசத்தைச் சேர்ந்தவரே இவ்வாறு துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகியுள்ளார்.

தொடர்ச்சி P2

## ராஜிதவுக்கு நிபந்தனை பிணை



கிரிந்த மீன்பிடி துறைமுகத்தில் மணல் அகழ்வு திட்டத்தை கொரிய நிறுவனத்திற்கு வழங்கியதன் மூலம் அரசாங்கத்திற்கு 20 மில்லியனுக்கும் அதிகமான இழப்பை ஏற்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவை கடுமையான பிணை நிபந்தனைகளின் அடிப்படையில் விடுவிக்க கொழும்பு பிரதான நீதவான் அசங்க எஸ். போதரகம, செவ்வாய்க்கிழமை (09) உத்தரவிட்டார்.

தொடர்ச்சி P2

UNHRC–யில் இலங்கைக்கு

## 43 நாடுகள் ஒற்றுமையை வெளிப்படுத்தின

ஜெனீவாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் (UNHRC) 60வது அமர்வில் நடைபெற்ற ஊடாடும் உரையாடல் நிகழ்வில் பேசிய சுமார் 43 நாடுகள் இலங்கையுடன் ஒற்றுமையை வெளிப்படுத்தியதாக வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சகம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

### "உங்களுக்கு பயமா?"



மனதில் பயம் இல்லை என்றால் வெளிநாட்டு பொறிமுறையை அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று இலங்கை தமிழரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே.கோடீஸ்வரன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## "காணி அறுதி உறுதி பத்திரங்களை வழங்கவும்"



கிளிநொச்சி மாவட்டத்தில் மக்களுக்கு முறையாக காணி அறுதி உறுதி பத்திரங்களை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இலங்கை தமிழரசு கட்சி பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிறீதரன் கோரிக்கை விடுத்தார்

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (09) வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது,

தொடர்ச்சி P2

சிறப்புப் பண்ட வரி

## "மேலதிக சுமையை ஏற்படுத்தியுள்ளது"

இறக்குமதி செய்யப்பட்ட பெரிய வெங்காயம் கிலோவுக்கு 10 ரூபாய் முதல் 50 ரூபாய் வரையிலும், உருளைக்கிழங்கு மீது 60 ரூபாவிலிருந்து 80 ரூபாவாக சிறப்புப் பண்ட வரி (SCL) அதிகரிக்கப்பட்டன. இந்த வரி அதிகரிப்பு மூலம் 22 மில்லியன் நுகர்வோர் மீது மேலதிக சுமையை ஏற்படுத்தியுள்ளது என எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார். பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (09) நிலையியற் கட்டளையின் கீழ் விசேட கூற்றை முன்வைத்தே இவ்வாறு தெரிவித்தார். அரசாங்கமானது இலங்கையில் பெரிய வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்குச் செய்கைத் தொழில்களில் இருந்து தங்கள் வாழ்வாதாரத்தை ஈட்டி வரும் விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குவதாக தெரிவித்து 2025.08.25 ஆம் திகதி அன்று வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் மூலம், இறக்குமதி செய்யப்பட்ட பெரிய



தொடர்ச்சி P2

ஜனாதிபதிகளின் உரித்துரிமைகள் நீக்குதல்

## "அரசியலமைப்புடன் முரண்படவில்லை"

### இன்று விவாதம்

ஜனாதிபதிகளின் உரித்துரிமைகள் நீக்குதல் எனும் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்தை சபாநாயகர் பாராளுமன்றத்தில், செவ்வாய்க்கிழமை (09) அறிவித்தார்

அரசியலமைப்பின் 121(1)ஆம் உறுப்புரையின் பிரகாரம் உயர் நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தப்பட்ட "சனாதிபதிகளின் உரித்துரிமைகள் (நீக்குதல்)" எனும் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்தை சபாநாயகர் (வைத்தியர்) ஜகத் விக்கிரமரத்ன பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

அதற்கமைய, இச்சட்டமூலம்



அரசியலமைப்பின் எந்தவொரு உறுப்புரையுடனும் முரண்படவில்லை என்றும் பாரளுமன்றத்தின் சாதாரண பெரும்பான்மையொன்றின் மூலம் அங்கீகரிக்கப்படலாம் எனவும் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதாக சபாநாயகர் அறிவித்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# ராஜிதவுக்கு நிபந்தனை பிணை

500,000 ரூபாய் தனிப்பட்ட பிணை, 200,000 ரூபாய் ரொக்கப் பிணை மற்றும் தலா 200,000 ரூபாய் பெறுமதியான மூன்று தனிப்பட்ட பிணைகளை விதித்த நீதவான், சந்தேக நபருக்கு வெளிநாடு செல்ல தடை விதித்தார்.

கடவுச்சீட்டை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவும், தொடர்புடைய உத்தரவை குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளருக்கு அனுப்பவும் உத்தரவிட்டார்.

பிணையாளர்களில் இருவர் நெருங்கிய உறவினர்களாக இருக்க வேண்டும் என்று கூறிய நீதவான், அனைத்து பிணையாளர்களின் வசிப்பிடமும் கிராம அதிகாரியால் சான்றளிக்கப்பட வேண்டும் என்றும் உத்தரவிட்டார்.

ராஜித சேனாரத்ன கடந்த 29 ஆம் திகதி கைது செய்யப்பட்டு கொழும்பு தலைமை நீதவான் அசங்கா எஸ். போதரகம முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டு, 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

சந்தேக நபர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது, சந்தேக நபர், அவரது மனைவி மற்றும் குடும்ப உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட சுரங்கத் திட்டத்தை வழங்கிய வெளிநாட்டு நிறுவனத்தின் அனுசரணையுடன் கொரியாவிற்கு ஒரு பயணத்தில் பங்கேற்றது குறித்து மேலும் விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு அதிகாரிகள் தெரிவித்தனர்.

எனவே, சந்தேக நபரின் பிணை விண்ணப்பத்தை நிராகரிக்குமாறு கோரப்பட்டது. இரு தரப்பினரின் உண்மைகளையும் பரிசீலித்த நீதிபதி, ஜாமீன் வழங்கினார்.

கிரிந்த மீன்வளத் துறைமுகத்தில் மணல் அகழ்வதற்கான திட்டத்தை நடத்த கொரிய நிறுவனத்திற்கு சட்டவிரோதமாக அனுமதி வழங்கியது மற்றும் உள்ளூர் சந்தைக்கு மணலை விற்பனை செய்தது தொடர்பாக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு வின் விசாரணைகள் தொடர்பாக இந்த விசாரணை நடத்தப்படுகிறது, இதனால் அரசாங்கத்திற்கு ரூ. 2.62 பில்லியன் இழப்பு ஏற்பட்டது.

# “ஜனாதிபதி அனுர அனுகம்பேக்கு செல்லவேண்டும்”

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (09 இடம்பெற்ற இலங்கைக்கும்,ஐக்கிய அரபு இராச்சியத்துக்கும் இடையிலான பல்துறை ஒப்பந்தம் தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் பேசுகையில்,

விஜயால் மட்டும் கச்சதீவை இலங்கையிடமிருந்து பெற முடியாது. கச்சதீவு என்பது இந்தியாவின் மத்திய அரசாங்கம் பேச வேண்டிய விடயம்.எனவே ஜனாதிபதி கச்சதீவுக்கு விஜயம் செய்ய வேண்டியதில்லை.விஜயை விட பலம் வாய்ந்த எம்.ஜி.ஆர் ,ஜெயலலிதா மற்றும் கருணாநிதி போன்றோர் தமிழ்நாட்டை ஆட்சி செய்த போதும் கச்சதீவில் கை வைக்க அவர்களினால் முடியவில்லை.ஆகவே, இந்த அரசியல் படம் காட்டும் வேலையை அரசாங்கம் நிறுத்திக்கொள்ள வேண்டும். ஜனாதிபதி கச்சதீவுக்கு செல்லாமல் அறுகம் குடாவுக்கு செல்ல வேண்டும். அப்பகுதியை இஸ்ரேலியர்கள் ஆக்கிரமித்துள்ளனர். அரசாங்கம் எதிர்க்கட்சியில் இருக்கும் போது, பலஸ்தீனியர்களுக்காக குரல் கொடுத்து விட்டு தற்போது இஸ்ரேலியர்களுக்கு ஆதரவாக செயற்படுகின்றது என்றார்.

# கெஹலியவின் குடும்பத்துக்கே நோட்டீஸ்

சந்தேகத்திற்கிடமான வங்கிக் கணக்குகளைப் பராமரிப்பதன் மூலம் பணமோசடிச் சட்டத்தின் கீழ் குற்றம் செய்ததாக ரம்புக்வெல்ல மற்றும் அவரது குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பேருக்கு எதிராக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு தாக்கல் செய்த முறைப்பாட்டை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

சந்தேகநபர்களான முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல, அவரது மனைவி குசும் எபா வீஹேன, மகள்கள் சந்துல ரமலி ரம்புக்வெல்ல, சமித்ரி ஜனனிகா ரம்புக்வெல்ல, அமலி நயனிகா ரம்புக்வெல்ல மற்றும் மருமகன் இசுரு புலஸ்தி

**“ சந்தேகத்திற்கிடமான வங்கிக் கணக்குகளைப் பராமரிப்பதன் மூலம் பணமோசடிச் சட்டத்தின் கீழ் குற்றம் செய்ததாக ரம்புக்வெல்ல மற்றும் அவரது குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பேருக்கு எதிராக வழக்கு தாக்கல்.**

**“ மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக ஆணைக்குழு நீதிமன்றத்தில் ஆவணங்களை சமர்ப்பித்தது**

ஆகியோர் கொழும்பு மேல் நீதிமன்றில் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதாக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு முன்வைத்த உண்மைகளை கருத்திற்கொண்டு இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் தடுப்புச் சட்டம் மற்றும் பணமோசடிச் சட்டத்தின் பிரிவுகள் 4 மற்றும் 3 இன் கீழ் தண்டனைக்குரிய குற்றங்களைச் செய்த சந்தேக நபர்களுக்கு எதிராக மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு நீதிமன்றத்தில் ஆவணங்களை சமர்ப்பித்தது.

# ”காணி அறுதி உறுதி பத்திரங்களை வழங்கவும்”

கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரிடம் கேள்வி எழுப்பி உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

நூறு வருடங்கள் கடந்துள்ள போதும் கிளிநொச்சி மாவட்டத்தில் மக்களுக்கு முறையாக காணி உறுதி பத்திரங்கள் வழங்கப்படவில்லை. உறுமய திட்டத்தில் வழங்கப்பட்ட பத்திரங்களும் அலுவலகங்களால் மீள பெற்றுக் கொள்ளப்படும் என கனி அரிசி உறுதிகளை வழங்க முடியாவிட்டால் தற்காலிகமாக வழங்கப்பட்ட உறுதி பத்திரங்களையாவது வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த மாவட்டத்தில் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் உள்ள நிலையில் 12 ஆயிரதத்கும் இருக்கும் அதிகமான காணிகள் உள்ள நிலையில் அவர்களுக்கான கானி உறுதிப் பத்திரங்களை வழங்க நடவடிக்கை எடுக்காமல் இருப்பது ஏன்? இதன்படி முறையாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றேன் என்றார்.

இதன் போது பதிலளித்த கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன பிரதி அமைச்சர் சுசில்ரனசிங்க

தெரிவிக்கையில்,

அந்த மாவட்டத்தில் ஏற்கனவே 1850 உறுதி பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் 477 விண்ணப்பங்கள் கிடைக்கப்பட்டுள்ளன. அதன்படி அந்த

# “இராஜதந்திர உறவுகளை முறித்துக் கொள்ள முடியாது”

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (09) இடம்பெற்ற இலங்கைக்கும்,ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு ம் இடையிலான பல்துறை ஒப்பந்தம் தொ டர்பான விவாதத்தில் உரையாற்றுகையிலே யே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் பேசுகையில், இஸ்ரேலுக்கு இலங்கையிலிருந்து ஊடகவியலாளர்கள் குழுவொன்று விஜயம் செய்தமை தொடர்பில் இங்கு கேள்வி எழுப்புகின்றனர் இஸ்ரேலுக்கு இலங்கையிலிருந்து ஊடகவியலாளர்கள் எவரும் அரசாங்கத்தின் அனுசரணையுடன் அனுப்பி வைக்கப்பட வில்லை. இஸ்ரேலுக்கு தனிப்பட்ட விஜயமாகவே செ ன்றுள்ளார்கள். எவரையும் அரசாங்கம் தெரிவு செய்யவில்லை. இலங்கையின் ஊடகவியலாளர்களுக்கு பல்வேறு நாடுகள் அழைப்பு விடுக்கின்றன. ஊடகவியலாளர்களும் செல்கிறார்கள்.

இஸ்ரேலில் 20 ஆயிரத்துக்கும் அதிகமாக இலங்கையர்கள் பணி புரிகிறார்கள்.அங்கு நிலவும் பிரச்சினைகளால் இலங்கைக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளை முறித்துக் கொள்ள முடியாது. இவ்விடயத்தில் பொதுவான கொள்கையையே கடைப்பிடிக்க வேண்டும். இஸ்ரேலுடனான சகல உறவுகளையும் இலங்கை முறித்துக் கொள்ள வேண்டும் என்று கூறுவோரின் மனநிலையை ஆராய வேண்டும் என்றார்.

# “மேலதிக சுமையை ஏற்படுத்தியுள்ளது”

வெங்காயம் கிலோவுக்கு 10 ரூபாய் முதல் 50 ரூபாய் வரையிலும், உருளைக்கிழங்கு மீது 60 ரூபாவிலிருந்து 80ரூபாவாக சிறப்புப் பண்ட வரி (SCL) அதிகரிக்கப்பட்டன.

இந்த வரி அதிகரிப்பு மூலம் 22 மில்லியன் நுகர்வோர் மீது மேலதிக சுமையை ஏற்படுத்தியுள்ளது என்பது அவதானிக்கப்பட்டுள்ளது. பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து ஏழ்மை நிலை 7 மில்லியனாக அதிகரித்துள்ளமையால், அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை சமூகத்தில் பரவலாக விமர்சிக்கப்பட்டு வருகின்றது.

அத்தியாவசிய நுகர்வுப்பொருட்கள் மீது வருடத்திற்கு வரையறுக்கப்பட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட பண்டங்கள் மீது (SCL) வரியை விதிப்பதன் மூலம் ஒரு சில இடைத்தரகர்கள் மட்டுமே எப்போதும் பயனடைவதால், விவசாயிகளுக்கும், நுகர்வோருக்கும் சலுகை கிடைக்கும் வேறு எந்த மாற்றுத் திட்டமும் அரசாங்கத்திடம் இல்லையா? இருந்தால், அது யாது ? என்றும் வினவினார்.

# ”அரசியலமைப்புடன் முரண்படவில்லை”

மேலும், அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையில் கூறப்பட்ட கட்டாய விதிகளை பின்பற்றி, நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தை தொடர்புபடுத்த மனுதாரர் தவறியதால், இந்த சட்டமூலம் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை உயர் நீதிமன்றம் நிராகரித்துள்ளதாகவும் சபாநாயகர் மேலும் அறிவித்தார்.

ஜனாதிபதியின் உரிமைகளை ரத்து செய்யும் சட்டமூலத்தை, புதன்கிழமை (10) விவாதிக்க பாராளுமன்ற அலுவல்கள் குழு முடிவு செய்துள்ளது.

சபாநாயகர் தலைமையில், செவ்வாய்க்கிழமை (08) நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் குழு கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

அதன்படி, புதன்கிழமை (10) காலை 11.30 மணி முதல் பிற்பகல் 3.30 மணி வரை விவாதம் நடைபெறும்.

# பலப்பிட்டிய துப்பாக்கிச் சூடு: கொலை சந்தேக நபர் காயம்.

குறித்த நபர், துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த கிரிக்கெட் வீரர் தம்மிக்க நிரோஷனவின் கொலையில் பிரதான சந்தேகநபர் ஒருவர் எனவும் இது தொடர்பாக பலப்பிட்டிய நீதிமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (09) இடம்பெற்ற வழக்கில் ஆஜராகியதன் பின்னர், வாடகைக்கு அமர்த்தி முச்சக்கர வண்டியில் வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது இந்த துப்பாக்கிச் சூடு இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் குறித்த நபர் மீது துப்பாக்கி சூடு நடத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

# 43 நாடுகள் ஒற்றுமையை வெளிப்படுத்தின

பஹ்ரைன், குவைத், ஓமன், கத்தார், சவுதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ், எத்தியோப்பியா, கோட் டி ஐவோயர், பிலிப்பைன்ஸ், ஜப்பான், லாவோஸ், தாய்லாந்து, , கொரிய ஜனநாயக மக்கள் குடியரசு, எரித்திரியா, ஈரான், நேபாளம், இந்தியா, ஜிம்பாப்வே, வியட்நாம், சீனா, அஜர்பைஜான், இந்தோனேசியா, துருக்கி, பெலாரஸ், எகிப்து, வெனிசுலா, மாலத்தீவுகள், கியூபா, தெற்கு சூடான், சூடான், ரஷ்ய கூட்டமைப்பு மற்றும் புருண்டி ஆகிய நாடுகள் இலங்கையுடன் ஒற்றுமையை வெளிப்படுத்திய நாடுகளில் அடங்கும் என்று வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சகம் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

மனித உரிமைகள் பேரவையுடனான இலங்கையின் தொடர்ச்சியான ஈடுபாட்டையும், உயர் ஸ்தானிகரின் வருகையையும், நாட்டின் மேம்பட்ட ஒத்துழைப்பின் அடையாளமாக வரவேற்றதாகவும், நாட்டில் நடந்து வரும் சட்டமன்ற சீர்திருத்தங்கள் உட்பட குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் மற்றும் உறுதியான முன்னேற்றத்தை அங்கீகரித்ததாகவும், HRC மற்றும் சர்வதேச சமூகம் இலங்கையை அதன் தேசிய உரிமைச் செயல்முறைகளில் ஆதரிக்க ஊக்குவித்ததாகவும் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

வளக் கட்டுப்பாடுகள் காரணமாக கவுன்சிலில் உள்ள முக்கிய ஆணைகள் நிறைவேற்றப்படாமல் போகும் அபாயத்தில் இருக்கும்போது, இலங்கைக்கு வெளிப்புற பொறிமுறைக்கு வளங்களை ஒதுக்குவதை அந்த நாடுகள் கேள்வி எழுப்பின, மேலும் வெளிப்புறமாக விதிக்கப்பட்ட இணையான செயல்முறைகள் துருவமுனைப்புக்கு ஆபத்தை விளைவிக்கின்றன என்பதை வலியுறுத்தின.

இலக்கு வைக்கப்பட்ட நாடுகளில் நாடு சார்ந்த வழிமுறைகளைத் திணிப்பது மனித உரிமைகள் பேரவையின் உலகளாவிய தன்மை, பாரபட்சமற்ற தன்மை, புறநிலை மற்றும் தேர்ந்தெடுக்காத தன்மை ஆகிய ஸ்தாபகக் கொள்கைகளை குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது என்றும், நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிட மனித உரிமைகளை இரட்டைத் தரநிலைகள், அரசியல்மயமாக்குதல் மற்றும் கருவியாக்குதல் குறித்து அவர்கள் கவலை தெரிவித்தனர்.

மனித உரிமைகளை மேம்படுத்துவதில் உற்பத்தி முடிவுகளை அடைய கவுன்சிலுக்குள் ஆக்கபூர்வமான உரையாடல் மற்றும் ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை அவர்கள் அடிக்கோடிட்டுக் காட்டியுள்ளனர் என்று அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 60 வது அமர்வு நேற்று திங்கட் கிழமை ஆரம்ப மானது. அங்கு உரையாற்றிய அமைச்சர்ஹேரத்,வெளிப்புறப் பொறிமுறை எதனையும் ஏற்கமாட்டோம் என திட்டவட்டமாக அறிவித்திருந்தார்.

நாட்டில் பிளவுகளை உருவாக்கி, நடை பெற்று வரும் தேசிய நல்லிணக்க செயல்மு றையை சிக்கலாக்கும் எந்தவொரு வெளிப் புற பொறிமுறையையும் இலங்கை எதிர்க் கின்றது என்று வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் ஜெனீவாவில் தெரி வித்திருக்கிறார்.

இதேவேளை, மனித உரிமைகள் மீறல்கள் மற்றும் சர்வ தேச மனிதாபிமான சட்ட மீறல்கள் தொடர் பானவிவகாரங்களைக் கையாள ஒரு சுயாதீ னமான விசேட ஆலோசகர் உட்பட ஒரு பிரத்தியேக நீதித்துறை பொறிமுறையை நிறுவுமாறு இலங்கை அரசாங்கத்திடம் ஐ.நா. மனிதஉரிமைகள் பேரவையின் உயர் ஸ்தானிகர் வோல்கர் டர்க் வலியுறுத்திய துடன் இந்த நடவடிக்கைகளுக்கு மனித உரிமைகள் பேரவை உட்பட சர்வதேச ஈடு பாடு அவசியமானது என்றும்அவர் சுட்டிக் காட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# “உங்களுக்கு பயமா?”

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (09) நடைபெற்ற இலங்கைக்கும் ஐக்கிய அரபு இராச்சியதிற்கும் இடையிலான பரஸ்பர ஒப்பந்தங்கள் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில், ஐ.நா மனித உரிமைகள் பேரவை 60 ஆவது கூட்டத் தொடரில் இலங்கை அரசாங்கத்தின் வெளிவிவகார அமைச்சர் உள்நாட்டு பொறிமுறையில் செயல்படுவதாகவே கூறியுள்ளார். ஆனால் ஆணையாளர் வெளிநாட்டு பொறிமுறை சிறந்தது என்று கூறியுள்ளார்.

எவ்வாறினும் உள்நாட்டு பொறிமுறையில் நாங்கள் நம்பிக்கை இழந்தவர்களாக இருக்கிறோம். ஏனென்றால் ஒவ்வொரு அரசாங்கமும் உள்நாட்டு பொறிமுறையே கூறி வந்துள்ளன. இதில் இனப்படுகொலை செய்த இராணுவம், புலனாய்வுத்துறை மற்றும் அதனுடன் தொடர்புடைய அரசியல்சாதிகளும் பாதுகாக்கப்படுவர். அதனாலேயே வெளிநாட்டு அனுசரையில் வெளிநாட்டு பொறிமுறை அடிப்படையில் தீர்மானம் நடைமுறை படுத்தப்பட வேண்டும்.

ஏன் நீங்கள் வெளிநாட்டு பொறிமுறையை ஏற்கவில்லை. இதில் உங்களுக்கு பயமா? உங்களுக்கு பயம் என்ற காரணத்தினால்தான் நீங்கள் வெளிநாட்டு பொறுமுறையை ஏற்கவில்லை.

இனப்படுகொலை செய்த இராணுவம், புலனாய்வு பிரிவு அதனுடன் தொடர்புடைய அரசியல்வாதிகள் மற்றும் ஒட்டுக் குழுக்களை பாதுகாக்கும் நோக்கத்திலேயே நீங்கள் வெளிநாட்டு பொறிமுறையை ஏற்கவில்லை.

நீங்கள் உண்மையானவர்கள் என்றால் அந்த பொறிமுறையை ஏற்கவேண்டும். உங்களுக்கு பயம் இல்லையென்றால், குற்றம் செய்தவர்களை தண்டிக்க வேண்டும் என்றால் வெளிநாட்டு பொறிமுறையை ஏற்க வேண்டும். அப்படியில்லை என்றால் நீங்கள் பயந்து இருக்கின்றீர்கள்.

இங்கு முள்ளிவாய்க்கால் மட்டுமல்ல வடக்கு கிழக்கில் செம்மணி போன்ற எத்தனையோ இடங்களில் இலட்சக்கணக்கான கொலைகள் நடந்துள்ளன. இதற்கான நீதியை நாங்கள் கோரி நிற்கின்றோம். உள்நாட்டு பொறிமுறையில் இதற்கு நீதி கிடைக்காது என்பது கடந்த காலங்களில் நிரூபிக்கப்பட்டுள்ளது. இதனால் வெளிநாட்டு பொறிமுறையை ஏற்றுக்கொண்டு நீதியை நிலைநாட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரசாங்கத்தால் போதைப்பொருள், இலஞ்சம் ஊழல் எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது. இது நல்ல விடயமே. இதேபோன்று இந்த விடயத்திலும் நீங்கள் வெளிநாட்டு பொறுமுறையை ஏற்கவேண்டும் என்றார்.







# ஏர்பூட்டு விழா...

வி.ரி.சகாதேவராஜா

வரலாற்று பிரசித்தி பெற்ற கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய பாரம்பரிய ஏர் பூட்டு விழா, விழாக்குழு தலைவர் க.சிவகுருநாதன் தலைமையில் பாரம்பரிய சம்பிரதாய முறைப்படி செவ்வாய்க்கிழமை (09) அன்று கோலாகலமாக நடைபெற்றது.

ஆலய பிரதம குரு சிவஸ்ரீ மு கு. சச்சிதானந்த குருக்கள், ஆலய குரு சிவஸ்ரீ வ. ஜோதிலிங்க குருக்கள் ஆசியோடு நிகழ்வு ஆலய காணியில் ஆரம்பமானது.

இந் நிகழ்வில் அதிதிகளாக மண்முனை தென்மேற்கு உதவி பிரதேச செயலாளர் எஸ்.பார்த்திபன், பட்டிப்பளை பிரதேச தவிசாளர் இ.திரேசகுமாரன் பெரும்பாக உத்தியோகத்தர் எஸ்.கலியுகராஜ் கலாசார உத்தியோகத்தர் சு.ருபேசன் ஆகியோர் கலந்து கொண்டார்கள் .

ஆலய பரிபாலன சபையின் வண்ணக்கர்களான இ.மேகராசா ( தலைவர் ), சி.கங்காதரன்( செயலாளர்), ச. கோகுலகிருஷ்ணன் ( பொருளாளர்) ஆகியோர் ஏர் பூட்டு விழாவை சம்பிரதாய முறைப்படி ஆரம்பித்து வைத்தனர்.

இதில் பட்டிப்பளை பிரதேச முன்னாள் தவிசாளர் அதிபர் சிவ.அகிலேஸ்வரன் உள்ளிட்ட பிரமுகர்களும் விவசாயப்பிரதிநிதிகளும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# “வாய் திறக்க மறுப்பது ஏன்”

இஸ்ரேல் பலஸ்தீனத்துக்கு எதிராக மேற்கொள்ளும் மனித குலத்துக்கு எதிரான செயற்பாடுகள் பற்றி மட்டும் ஏன் வாய் திறக்க மறுக்கின்றீர்கள் என அரசிடம் ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி அஜித் பி பெரேரா கேள்வி எழுப்பினார்

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (09) இடம்பெற்ற இலங்கைக்கும்,ஐக்கிய அரபு இராச்சியத்துக்கும் இடையிலான பல்துறை ஒப்பந்தம் தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு கேள்வி எழுப்பினார்இ

லங்கையர்கள் பலர் இஸ்ரேலில் தொழில் புரிகிறார்கள். இஸ்ரேல் இலங்கைக்கு தொழில்நுட்ப ரீதியில் ஒத்துழைப்பு வழங்கியள்ளது.அதேவேளை இஸ்ரேல் பலஸ்தீனத்துக்கு எதிராக மனிதாபிமானமற்ற செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. பலஸ்தீனத்தில் மனித படுகொலைகள் நாளுக்கு நாள் தீவிரமடைந்துள்ளன.



இஸ்ரேலின் மனித குலத்துக்கு எதிரான செயற்பாடுகளுக்கு எதிராக உலக நாடுகள் அனைத்தும் எதிர்ப்பு தெரிவிக்கின்ற நிலையில் இலங்கையில் இருந்து ஒரு தரப்பினர் இஸ்ரேலுக்கு சென்றுள்ளார்கள். இவ்வாறு சென்றவர்களை தாம் அறியவில்லை என்று அரசாங்கம் கூறுகின்றது .இதனையே இரட்டை நிலைப்பாடு என்று நாம் கூறுகின்றோம்.இதுதான் பிரச்சினை. இஸ்ரேல் தனியான இராச்சியம் என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். அதேபோல் பலஸ்தீனமும் தனியானதொரு நாடு என்பதையும் ஏற்றுக்கொள்கிறோம்.பலஸ்தீனர்கள் நிம்மதியாக தமது இறையாண்மையுடன் வாழ்வதற்கு இடமளிக்க வேண்டும்.இலங்கை தொடர்ச்சியாக பலஸ்தீனத்துக்காகவே குரல் கொடுத்தது . இந்த நாட்டில் அவ்வாறான கலாசாரம் மற்றும் மரபு காணப்பட்டது. பலஸ்தீனர்களை பற்றி குறிப்பிட்டு வாக்குகளைப் பெற்று ஆட்சிக்கு வந்தவர்கள் இன்று பலஸ்தீனத்தில் மனித படுகொலைகள் தீவிரமடைந்துள்ள நிலையில் அமைதி காக்கிறார்கள்.

இனம் மதம் மற்றும் மொழிக்கு அப்பாற்பட்டு பலஸ்தீனத்தின் இன்றைய நிலை பற்றி பேசாமல் இருப்பது பிரச்சினையில்லையா?அனைத்துக்கும் பேசுகின்றீர்கள்.மணித்தியால கணக்கில் பேசுகின்றீர்கள். இஸ்ரேல் பலஸ்தீனத்துக்கு எதிராக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் பற்றி ஏன் எதுவுமே பேசுவதில்லை. இது முறையற்றது. அரசாங்கம் மனிதாபிமானத்துடன் இதனை பார்க்க வேண்டும் என்றார்.



# ‘ஆர்மி சுரங்க’ கைது

மேற்கு மாகாண (தெற்கு) குற்றப்பிரிவு ஹன்வெல்லவில் கைது செய்த சந்தேக நபரை, ‘ஹோமாகம ஹந்தயா’ என்று அழைக்கப்படும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியுடன் தொடர்புடையவர் என்று சந்தேகிக்கப்படுகிறது.

அவர், ‘ஆர்மி சுரங்க’ என்று அழைக்கப்படும் புத்திக லக்மால் என்றும் இவர் முன்னாள் சிப்பாய் என்பதுடன், அவர், துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து 12 துளைகளைக்கொண்ட துப்பாக்கி மற்றும் மூன்று தோட்டாக்கள் பறிமுதல் செய்யப்பட்டன. துப்பாக்கி இரண்டு துண்டுகளாக பிரிக்கப்பட்டு ஒரு பையில் வைக்கப்பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.


ஹன்வெல்லவில் கடந்த மாதம் நடந்த துப்பாக்கிச் சூட்டில் அவர் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது, அங்கு ஒருவர் சுடப்பட்டு காயமடைந்தார்.

# கைக்குண்டுகள் நா ன்கு மீட்பு

வரீன்பராஜா சவேஷ்

மட்டக்களப்பு - ஏறாவூர் ஓட்டுப்பள்ளி குறுக்கு வீதியில் பழைய பாடசாலை ஒன்று அமைந்திருந்த காணியொன்றில் புதைக்கப்பட்ட நிலையில் நான்கு கைக்குண்டுகள் செவ்வாய்கிழமை (09) அன்று மீட்கப்பட்டுள்ளன.

ஆயுதங்கள் இருப்பதாக பொலன்னறுவை இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய ஏறாவூர் நீதவான் நீதிமன்ற உத்தரவை பெற்று குறித்த பகுதியில் பொலிஸார் , விசேட அதிரடி படையினர், இராணுவ புலனாய்வு பிரிவினர்



இணைந்து ஏறாவூர் பொலிஸ் பொறுப்பதிகாரி பிரசாத் லியனகே தலைமையில் அகழ்வுப் பணியில் ஈடுபட்டனர். இதன்போது சுமார் ஐந்து அடி ஆழத்தில் புதைக்கப்பட்டிருந்த மூடியிடப்பட்ட வாளி ஒன்றினுள் இருந்து நான்கு கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

இச்சம்பவம் தொடர்பாக ஏறாவூர்ப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பிரதம நீதியரசரின் வாகனத் தொடரணி ;

# காணொளி எடுத்தவருக்கு விளக்கமறியல்

பிரதம நீதியரசரின் வாகன அணிவகுப்பை காணொளிப் பதிவு செய்த சந்தேக நபரொருவர் கறுவாத் தோட்டம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, கொழும்பு பிரதான நீதவான் அசங்க எஸ். போதரகம முன்னிலையில் திங்கட்கிழமை (8) முன்னிலைபடுத்தப்பட்டிருந்தார்.

சந்தேக நபர் குறித்து தொடர்ந்தும் விசாரணை இடம்பெறுவதாக தெரிவித்த கறுவாத்தோட்டம் பொலிஸார், சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றத்தில் வேண்டுகோள் விடுத்தனர்.

அத்துடன், சந்தேக நபரின் கையடக்கத் தொலைபேசியை அரச இரசாயன பகுப்பாய்வாளருக்கு அனுப்பி அறிக்கையை கோருவதற்கான உத்தரவை பிறப்பிக்குமாறு நீதிமன்றத்திடம் பொலிஸார் கோரிக்கை விடுத்தனர்.

சந்தேக நபர் சார்பில் நீதிமன்றில் முன்னிலையான சட்டத்தரணி, சம்பந்தப்பட்ட வாகன அணிவகுப்பை காணொளி எடுத்ததற்காக தமது கட்சிக்காரர் மன்னிப்பு கேட்டதாகவும், எனவே அவரை பிணையில் செல்ல அனுமதிக்குமாறும் கோரினார். முன்வைக்கப்பட்ட சமர்ப்பணங்களை கருத்தில் கொண்ட நீதவான் சந்தேக நபரை எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். சந்தேக நபரின் கையடக்கத் தொலைபேசியை அரச இரசாயன பகுப்பாய்வாளருக்கு அனுப்பி, அறிக்கையை பெற்றுக் கொள்வதற்கான உத்தரவை நீதவான் பிறப்பித்துள்ளார்.

# பிரபல ஹோட்டலுக்கு சீல்

ரீ.எல். ஜவ்பர்கான்

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மட்டக்களப்பு நகரில் மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற முறையில் உணவு பொருட்களை தயாரித்து விற்பனை செய்த பிரபல ஹோட்டல் ஒன்றை இரு தினங்களுக்கு மூடி சீல் வைக்க மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.சுதர்சனி உத்தரவிட்டுள்ளார்

மட்டக்களப்பு நகரில் உள்ள குறித்த உணவு விற்பனை நிலையத்தின் மீது பொதுமக்கள் கொடுத்த புகாரின் அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் எஸ். முரளீஸ்வரனின் பணிப்புரையின் பேரில் மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ டாக்டர் இ.உதயகுமாரின் வழிகாட்டலில் கோட்டைமுனை பொது சுகாதார பரிசோதகர் ரி. மிதுன்ராஜ் தலைமையிலான பொது சுகாதார பரிசோதகர்கள் குறித்த ஹோட்டலை சுற்றி வளைத்து தேடுதல் நடத்தியபோது மனித பாவனைக்கு உதவாத பெருமளவிலான உணவுப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.



மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற முறையில் உணவு தயாரித்தல், மனித பாவனைக்கு உதவாத உணவுப் பொருட்களை விற்பனை செய்தல் உட்பட ஐந்து குற்றச்சாட்டுகளுக்கமைய குறித்த ஹோட்டல் மீது வழக்கு தாக்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் குறித்த ஹோட்டல் உரிமையாளருக்கு 45 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

இரு தினங்களுக்கு ஹோட்டலை சீல் வைத்து மூடுமாறும் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ சுதர்ஷினி உத்தரவிட்டுள்ளதுடன் நீதிமன்ற உத்தரவின் பேரில் குறித்த ஹோட்டல் பொது சுகாதார பரிசோதகர்களினால் திங்கட்கிழமை(8) மாலை சீல் வைத்து மூடப்பட்டுள்ளது.

1333 BIKEATHON
ride to save lives
RIDE TO SAVE LIVES
CYCLING TOUR
12TH CONSECUTIVE YEAR

12ஆம் நாளின் பதிவுகள் | 117 கி.மீ | குருநாகல் முதல் நீர்கொழும்பு வரை








CALL FOR CRISIS SUPPORT
CCC FOUNDATION
courage compassion commitment
1333
WE LISTEN SUPPORT EMPOWER

இன்று
13 நாட்களில் 13ஆம் நாள்
செப்டெம்பர் 10
நீர்கொழும்பு → கொழும்பு (45 கி.மீ)

சுதந்திர சதுக்கத்தில்
மாலை 4:30 மணியளவில்
நடைபெறவுள்ள நிறைவு விழாவில்
எங்களுடன் இணையுங்கள்.

எந்த தொலைபேசியிலிருந்தும்,
எந்த இடத்திலிருந்தும் 24 X 7
ஆதரவுக்கு 1333ஐ
அழைக்கவும்
www.1333.lk

wijeya newspapers
DAILY MIRROR
தமிழ்Mirror
the SUNDAY TIMES

# போதைப்பொருள் பிரபுக்களின் விளையாட்டு மைதானம்

இந்த நாட்டின் இளம் தலைமுறையினர் பாடசாலைப் பருவத்திலிருந்தே போதைப்பொருள் கடத்தல், போதைப்பொருள், கஞ்சா மற்றும் ஐஸ் போதைப்பொருள் பயன்பாடு ஆகியவற்றிற்குப் பழக்கப்பட்டுள்ளனர் என்பது விசாரணைகளின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த நாட்டின் மக்கள் தொகையில் சுமார் எண்பத்தைந்து லட்சம் பேர் இளம் தலைமுறையினரைக் குறிக்கின்றனர். கடந்த காலங்களில் நடந்த சமூக மற்றும் அரசியல் நடவடிக்கைகள் காரணமாக, நாடு போதைப்பொருள் பிரபுக்களின் விளையாட்டு மைதானமாக மாறியுள்ளது. அரசியல் ரீதியாக அதற்கு அதிக ஆசீர்வாதங்கள் கிடைத்திருப்பது அனைவரும் அறிந்த உண்மை.

அரசியலுக்கும் பாதாள உலகத்துக்கும் இடையிலான தொடர்பு காரணமாக, போதைப்பொருள் வர்த்தகத்தைப் பரப்புவதற்கு பொருத்தமான சட்ட கட்டமைப்பை செயல்படுத்த முடியாத சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது. போதைப்பொருள் கடத்தல்காரர்களும், பல்வேறு பாதாள உலகப் பெயர்களால் அறியப்படும் பாதாள உலகமும், அந்தக் காலத்தில் அரசியல் அதிகாரிகளால் பாதுகாக்கப்பட்டு பராமரிக்கப்பட்டன என்பது தெளிவான உண்மையாக அங்கீகரிக்கப்படலாம்.

ஐஸ் என்ற போதைப்பொருளை உற்பத்தி செய்வதற்காக பாதாள உலக உறுப்பினர்கள் ஒரு பெரிய அளவிலான தொழிற்சாலையை கட்டத் தயாராகி வருவதாகக் கூறப்பட்டது.

மித்தெனிய பகுதியில், அதற்கான மூலப்பொருட்கள் சேமித்து வைக்கப்பட்டிருந்த ஒரு நிலமும் சோதனை செய்யப்பட்டது, இது நாட்டுடனான அந்த தொடர்பை வெளிப்படுத்தியது. எப்படியாவது இந்த தொழிற்சாலை ஐஸ் என்ற போதைப்பொருளை உற்பத்தி செய்து நாடு முழுவதும் விநியோகித்திருந்தால், இந்த நாடு ஐஸ் போதைப்பொருள் நிறைந்த நாடாக மாறியிருக்கும்.

ஆயிரம் நம்பிக்கைகளை வைத்திருந்த இளைஞர்களின் எதிர்காலத்தை தியாகம் செய்யத் தீர்மானித்த கடத்தல்காரர்களும், அரசியல் பாதுகாப்பை ஆதரித்து வழங்கியவர்களும் சட்டத்தின் முன் தண்டிக்கப்பட வேண்டும்.

நாட்டின் இளைஞர்கள் அந்த நாட்டின் பெருமையாக கருதப்படுகிறார்கள். இளைஞர்கள் வேண்டுமென்றே அல்லது முறையாக போதைப்பொருட்களுக்கு இரையாகிவிட்டால், நாட்டின் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடும்

இந்த நாட்டின் அரசியலமைப்புச் சட்டம் மற்றும் சர்வதேச மரபுகளின்படி, போதைப்பொருள் பயன்பாடு மற்றும் விநியோகம் ஒரு மரண தண்டனை வழங்கப்படும் குற்றமாகும்.எனினும், ஒவ்வொரு நாளும் போதைப்பொருள்கள் சிக்குகின்றன

தற்போதைய சூழ்நிலையில் 100 சதவீதம் அகற்றக்கூடிய ஒரு பிரச்சினை அல்ல. அதன் வேர்கள் சமூகம் முழுவதும் பரவியுள்ளன.

ஒரு நாட்டின் அரசியல் சமூகம், பாடசாலைகள் மற்றும் கோயில்கள் போன்ற அனைத்து இடங்களிலிருந்தும் போதைப்பொருள் தடுப்பு தொடர்பான அணுகுமுறை மற்றும் சித்தாந்தத்தைப் பரப்பும் அதே வேளையில், போதைப்பொருள் பரவலுக்கு ரகசியமாக உதவியிருந்தால், அது ஒரு பிரச்சனையாகும். அத்தகைய அதிகாரிகள் மற்றும் இராஜதந்திரிகளைக் கண்டுபிடித்து அவர்களுக்கு அதிகபட்ச தண்டனை வழங்குவது காலத்தின் தேவை.

போதைப்பொருள் வர்த்தகத்தைத் தடுக்கவும் பாதாள உலகத்தைக் கட்டுப்படுத்தவும் அரசாங்கம் மேற்கொண்டு வரும் நேர்மறையான முயற்சிகளை துரிதப்படுத்த வேண்டும் என வலியுறுத்துகின்றோம்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

நம்பிக்கையுடன் நாமே தேடும் ஆதாயங்கள் உண்மை வழியில், நேர்மையாக இருக்க வேண்டும். ஒரு வர்த்தகர் நம்பிக்கையுடன் ஒரு தொழிலைத் தொடங்கினால் அது நிலையாக இருக்க நேர்மை, நாணயம் மிக அவசியம்.

எந்த தொழிலிலும் எல்லோரும் உயர் நிலைக்கு வரமுடியும். ஆனால், மக்கள் நலன் பற்றியும் கவனமெடுக்க வேண்டும்.

நீங்கள் சரியாக நடந்தால் உங்களை நோக்கி ஒரு பெருங்கூட்டமே இணைந்து வரும். லாபம் என்பது வெறும் பணம் அல்ல. மக்களை நேசிப்பதால் வரும். அன்பினால் கிடைத்த வரவுகளாகும்.

இணைந்த மக்கள் பலமே, வையகத்தின் செழிப்புமாகும். பிறரைத் தூக்கிவிடாதவனும், தன்னை மட்டும் கவனிப்பவனும், எவரது வளர்ச்சியைத் தடுப்பவனும் உலகத்தால் வீசியெறியப்படுகின்றான்.

உலகம் ஒரு பெரிய வீடு ஒவ்வொரு நாடுகளும் அதன் அறைகள் என்பதைச் சகல அரசுகளும் உணரவேண்டும். எமக்கே எல்லாம் என எந்த வல்லரசும் பேராசை கொண்டால். என்ன நடக்கும். என்பதைக் கற்பனை செய்யமுடியாது. ஒவ்வொரு மனிதனும் இந்த உலகை இயக்குகின்றான். எனவே, எமக்கானதே இந்த புவனம் உணர்க.

பருத்தியூர் பால.வைரவநாதன்



எம்.எஸ்.எம். ஐயூப்

# செம்மணியை கடந்த கச்சதீவுக்கு சென்ற ஜனாதிபதி

ஐ.நா. மனித உரிமை பேரவையின் 60 ஆவது கூட்டத் தொடர் ஜெனீவா நகரில் 8 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகியது.

அதில் உரையாற்றிய இலங்கையின் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் விஜித ஹேரத் அரச படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான போரின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக் கூறல் என்ற விடயத்தில் வெளிநாட்டு பொறிமுறை ஒன்று தலையிடுவதை நிராகரித்தார்.

கடந்த வருடம் பிரேரணையை நிராகரிக்க தேசிய மக்கள் சக்தி கடுமையாக நிர்பந்திக்கப்பட்டது. ஏனெனில் கடந்த வருடம் மனித உரிமை பேரவையின் கூட்டத் தொடர் அதே வருடம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலுக்கு பின்னரும் பொதுத் தேர்தலுக்கு முன்னருமே நடைபெற்றது. ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளரான அனுர குமார திஸாநாயக்க வெற்றி பெற்றாலும் செல்லுபடியான வாக்குகளில் 42 சதவீத வாக்குகளையே பெற்றார்.

இதே வாக்கு வீதத்தை தேசிய மக்கள் சக்தி பொதுத் தேர்தலிலும் பெற்றால் அதற்கு பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தை பெற முடியாமல் போய்விடும் என்றதோர் அபாயம் அப்போது நிலவியது. இந்த நிலையில் மனித உரிமை பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டு இருந்த பிரேரணையை ஆதரித்து பெரும்பான்மை மக்களின் வாக்குகளை மேலும் இழக்க தேசிய மக்கள் சக்தி விரும்பாது என்பது இலகுவில் விளங்கிக் கொள்ள முடியும்.

பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி 62 சதவீத வாக்குகளை பெற்று மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அரசாங்கத்தை நிறுவினாலும் மக்கள் அண்மைக்கால பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்பட்டு விரக்தியால் உந்தப்பட்டு தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்தார்களேயல்லாமல் அறிவுபூர்வமாக வாக்களிக்கவில்லை.

அண்மையில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் அது தெளிவாக தெரிய விருந்து. எனவே இன்னமும் பெரும்பான்மை மக்களை பகைத்துக் கொள்ளும் வகையில் செயல்பட அரசாங்கம் தயாராக இல்லை.

சர்வதேச பொறிமுறையென்றின் மூலம் நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் நல்லிணக்க முயற்சிகள் பாதிக்கப்படலாம் என்பதனாலேயே அரசாங்கம் அதனை நிராகரிப்பதாக அமைச்சர் விஜித்த ஹேரத் திங்கட்கிழமை மனித உரிமை பேரவையில் ஆற்றிய தமது உரையில் கூறினார்.

நடைமுறையில் பார்த்தால் அதை மறுக்க முடியாது. இவ்வாறானதொரு பொறிமுறை ஒன்றின் மூலம் போர் காலத்தில் இடம்பெற்ற சம்பவங்களைப் பற்றிய விசாரணைகள் அரம்பிக்கப்படும் இன ரீதியாக பிரிந்து அதற்கு ஆதரவாகவும் எதிராகவும் மக்கள் கருத்து தெரிவிக்க முற்படுவார்கள். இனவாத மற்றும் தேசியவாத குழுக்கள் தமது கருத்தை வலியுறுத்தி ஆர்ப்பாட்டங்களை நடத்தும். இனவாத போக்குடைய ஊடக நிறுவனங்களும் தமது கைவரிசையை காட்டும்

நல்லாட்சி அரசாங்கம் என்று கூறிக்கொண்ட அரசாங்கமும் இந்த நிலைமையை எதிர்நோக்கியது. அவ் அரசாங்கம் 2015 ஆம் ஆண்டு மனித உரிமை பேரவையின் பிரேரணைக்கு இணை அனுசரணை வழங்கியது. அப்பிரேரணையின் கீழ் பொதுநலவாய நாடுகளின் நீதிபதிகளை கொண்ட பொறிமுறை ஒன்றை அமைக்க அரசாங்கம் இணக்கம் தெரிவித்து இருந்தது. ஆனால் அதே ஆண்டு டிசம்பர் மாதம் முப்படைகளின் தளபதிகள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்து இதைப் பற்றிய தனது ஆதங்கத்தை தெரிவித்ததை அடுத்து நிலைமை மாறியது.

அமைச்சர் விஜித ஹேரத் கூறுவதைப் போல் மனித உரிமை விவகாரங்களை கையாள உள்ளக பொறிமுறை ஒன்றை அமைத்தாலும் விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் போது இரு புறத்திலும் தேசியவாத குழுக்கள் தத்தமது நிலைப்பாடுகளில் விடாப்பிடியாக நிற்பர். அதன் மூலமும் நல்லிணக்க முயற்சிகள் பாதிக்கப்படலாம்.

அண்மையில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்ட போது எவரும் சட்டத்திற்கு அடிபணிய வேண்டும் என்று அரசாங்கத்தின் தலைவர்கள் வாதிட்ட போதிலும் போர் கால சம்பவங்களைப் பற்றிய விசாரணை என்று வரும் போது அது நடைமுறை சாத்தியமாகுமா என்ற கேள்வி எழுகிறது. இது தான் யதார்த்தம். அதனால் தான் கடந்த வருடமும் அதேபோல் தேசிய பொறிமுறை ஒன்றைப் பற்றி வெளிநாட்டமைச்சர் கூறிய போதிலும் அதன் பின்னர் கடந்த ஒரு வருட காலத்தில் அந்த விடயம் தொடர்பில் அரசாங்கம் எதையும் செய்யவில்லை.

ஆயினும் இதனை ஏற்க தமிழ் தலைவர்களும் தீவிர இடதுசாரிகளும் தயாராக இல்லை. தமது இருப்பைப் பற்றிய அரசாங்கத்தின் அச்சம் எதுவாக இருப்பினும் சர்வதேச பொறிமுறை ஒன்றின் மூலமே விசாரணைகள் நடைபெற வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே அவர்கள் இருக்கின்றனர்.

ஆனால் கடந்த கால அரசாங்கங்களிலிருந்து தேசிய மக்கள் சக்தி சில விடயங்களில் வேறுபடுகிறது. தற்செயலாக மனித எழும்பொன்று கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து ஆரம்பிக்கப்பட்ட செம்மணி கூட்டு புதைகுழியில் அகழ்வுப் பணிகளை தொடர தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தேவையான வசதிகளை செய்து கொடுத்துள்ளது. (தற்போது எதிர்பாராத அளவு நீடித்துச் செல்லும் அகழ்வுப் பணிகளுக்குப் போதிய நிதி இல்லாமையால் அப்பணிகள் தடைப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.) கடந்த பிப்ரவரி மாதம் முதல் இது வரை செம்மணியிலிருந்து சுமார் 240 மனித எழும்புக் கூடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அரசாங்கம் நினைத்திருந்தால் இந்த அகழ்வுப் பணிகளை ஆரம்பத்திலேயே தடுத்திருக்கலாம்.

அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட போது அரசாங்கம் புலம்பெயர் தமிழர்களை திருப்திப்படுத்த அப்பணிகளை ஊக்குவிப்பதாக விமல் வீரவன்ச மற்றும் சரத் வீரசேகர போன்ற பேரினவாதிகள் பெரும்பான்மை மக்களை குழப்ப முற்பட்ட போதிலும் அரசாங்கம் அதை பொருட்படுத்தவில்லை.

ஆனால் அகழ்வுப் பணிகள் முடிவடைந்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டு அரச படைகள் குற்றஞ்சாட்டப்படும் போது சிலவேளை எதிர்ப்புகள் எழலாம். எனவே அரசாங்கம் அதனை தணிப்பதற்காக புலிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகளையும் விசாரணைக்கு உட்படுத்தலாம். ஏற்கனவே மட்டக்களப்பு மாவட்டத்தில் குருக்கல்மடத்தில் இருப்பதாகக் கூறப்படும் கூட்டு புதைக்குழி பகுதியில் அகழ்வுப் பணிகளை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. கடந்த மாதம் 25 ஆம் திகதி களுவாஞ்சிக்குடி நீதிவான் ஏ.ஜே.பி ரஞ்சித்குமார் அந்தப் புதைகுழிகளை அகழ கட்டளையிட்டுள்ளார்.

1990 ஆம் ஆண்டு ஜூலை 13 ஆம் திகதி புலிகள் ஹஜ் பிரயாணம் சென்று திரும்பிக்கொண்டு இருந்த நூற்றுக்கு மேற்பட்டோரை கடத்திச் சென்று குருக்கல்மடத்தில் அவர்களை படுகொலை செய்தனர். மொத்தம் 167 பேர் அவ்வாறு கொல்லப்பட்டதாக கூறப்படுகிறது. இந்தச் சம்பவத்தின் போது உயிர் தப்பிய ஒருவரின் முறைப்பாட்டை அடுத்தே இந்த விசாரணை நடக்கவிருக்கிறது.

இதேவேளை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க கடந்த செப்டம்பர் 1 ஆம் திகதி வட மாகாணத்துக்கு சென்றார். அந்த விஜயத்தின் ஒரு பகுதியாக அவர் 2 ஆம் திகதி கச்சதீவுக்கும் சென்றார். அதன் போது நாட்டின் கடலையும் நிலத்தையும் பாதுகாக்க தமது அரசாங்கம் அனைத்தையும் செய்யும் என்றும் கூறியிருந்தார். இந்த கச்சதீவு விஜயமும் அவரது கூற்றும் வடக்கில் மீனவர்களை நீண்ட காலமாக பாதித்து வரும் ஒரு முக்கிய பிரச்சினையோடு சம்பந்தப்பட்டுள்ளதாக தெரிகிறது.

இந்திய மீனவர்கள் கடந்த பல தசாப்த காலமாக நிரந்தரமாக இலங்கையின் வட மாகாண மீனவர்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் வகையில் இலங்கையின் கடல் பரப்பில் நுழைந்து சட்ட விரோதமன முறையில் மீன் பிடித்து வருகிறார்கள். இந்தப் பிரச்சினையை தமிழக அரசியல்வாதிகள் அரசியலாக்கியும் வருகிறார்கள். இதன் ஓரங்கமாக அவர்கள் கச்சதீவை மீண்டும் இந்தியா பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் கூறுகின்றனர். கடந்த ஆகஸ்ட் 21 ஆம் திகதி மதுரையில் நடைபெற்ற தமது கட்சி மாநாட்டில் உரையாற்றிய சினிமா நடிகரும் தமிழ்நாடு வெற்றிக் கழகத்தின் தலைவருமான விஜய் என சுருக்கமாக அழைக்கப்படும் ஜோசப் விஜய் சந்திரசேகரும் கச்சதீவை மீட்க வேண்டும் என்று கூறியிருந்தார்.

இந்த நிலையில் ஜனாதிபதி மக்கள் குடியிருப்புகளற்ற கச்சதீவுக்கு சென்று இலங்கையின் இறைமையைப் பற்றிப் பேசியுள்ளார். இது வடக்கிலும் தெற்கிலும் வாழும் மக்களின் வரவேற்பை பொதுவாக பெறக்கூடிய உரையாகும். ஆனால் அதிலும் குறை காண்போர் இருக்கின்றனர். கச்சதீவுக்குச் சென்ற ஜனாதிபதி செம்மணிக்குச் செல்வில்லை என்று அவர்கள் வாதிடுகின்றனர்.

உண்மை தான். ஆனால் அவ்வாறு அவர் செம்மணிக்குச் சென்றிருந்தால் அது தென்பகுதி இனவாதிகளுக்கு தீனி போட்டதாகவே அமையும். செம்மணியில் நடைபெறும் அகழ்வுப் பணிகளுக்கான அவர்களது எதிர்ப்புக்கு வலுச்சேர்க்கவே அது உதவும். ஜனாதிபதி செம்மணிக்குச் செல்வதால் தமிழ் தலைவர்களது மனதை வெல்ல முடியும் என்று கூறவும் முடியாது. அவர்கள் சிலவேளை அதனை நடிப்பு என்று கூறலாம்.

மொத்தத்தில் இனப் பிரச்சினை விடயத்தில் இந்த அரசாங்கத்தின் கீழும் ஒரு சில மாற்றங்களை மட்டுமே எதிர்பார்க்க முடியும். அரசாங்கத்தின் தலைவர்கள் சில விடயங்களை செய்ய விரும்பினாலும் அரசாங்கத்தின் இருப்பை சவாலுக்குள்ளாக்கும் வகையிலான எதையும் அவர்களிடம் இப்போது எதிர்பார்ப்பது யதார்த்தபூர்வமானதல்ல.

## கடிதங்கள்

### குழாநீரில் கலக்கப்படும் கழிவுநீர்

நோர்டன்பிரிட்ஜ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெசல்கமுவ கந்த கிராமத்தின் வழியாக ஓடும் களனி நதிக்கு, நீர் வழங்கும் இரண்டு கால்வாய்களுக்கு வட்டவலை,லொனெக் கால்நடை பண்ணையில் இருந்து பல ஆண்டுகளாக கால்நடை கழிவுகள் வெளியேற்றப்படுவதால் குறித்த கால்வாயில் இருந்து வரும் தண்ணீரைப் பயன்படுத்தும் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த சுமார் 500 குடும்பங்கள் தினசரி பயன்பாட்டிற்காக இந்த கால்வாயிலிருந்து தண்ணீரைப் பெறுகின்றதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக கருத்துக்களைத் தெரிவித்த கிராம மக்கள், கிட்டத்தட்ட 05 ஆண்டுகளாக பண்ணையில் இருந்து வெளியேற்றப்படும் விலங்குக் கழிவுகள் தாங்கள் பயன்படுத்தும் குடிநீரில் கலந்து வருவதாகவும், அவ்வப்போது தங்கள் குழந்தைகள் மற்றும் பெரியவர்கள் பல்வேறு நோய்களால் பாதிக்கப்படுவதாகவும் தெரிவித்தனர்.

இந்தப் பண்ணையின் சுற்றுச்சூழல் விரோத நடவடிக்கைகள் குறித்து பல முறை முறையிட்டும் இதுவரை எந்த உறுதியான தீர்வும் வழங்கப்படாததால் தாங்கள் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளதாக கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் இது தொடர்பாக உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

காமினி பண்டார இளங்கந்திலக



# நீலப்பசுமை பொருளாதாரம்



ரவிச்சந்திரன் சிவானிஜா,
புவியியல் சிறப்புக்கலை.
யாழ்ப்பாணம்
பல்கலைக்கழகம்.




புராதன காலத்திலிருந்து மனிதன் தனது உணவுத் தேவையை பூர்த்தி செய்வதற்காக தான் வாழ்கின்ற சூழலில் உள்ள நன்னீர் நிலைகளான ஆறுகள்,குளம் மற்றும் உவர் நீர் நிலைகளான கடல் ,உவர் ஏரி போன்றவற்றிலிருந்தும் மீன்பிடித் தொழிலை செய்து வந்துள்ளான்.

இலங்கை கரையோர மக்களின் முக்கிய பொருளாதார நடவடிக்கை மீன்பிடித் தொழிலாகும். மீன்பிடித் துறையில் 600,000ற்கும் அதிகமான நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்பை பெற்றுள்ளனர். மொத்த தேசிய உற்பத்தியில் 3-4 %மான பங்கை வகிப்பதோடு கடல் உணவு மற்றும் ஏற்றுமதியின் மூலம் அந்நிய செலவாணியை பெற்றுக்கொள்கிறது.

இலங்கையின் உள்நாட்டு யுத்தம் காரணமாக வடக்கு, கிழக்கு பகுதியில் இத்துறை மோசமாகப் பாதிப்படைந்து இருந்தது.2009ம் ஆண்டு யுத்தத்தின் பின் மீன்பிடித்துறை மீள கட்டியெழுப்பப்பட்டது.இலங்கையின் மீன்பிடித்துறை விருத்திக்கு சாதகமான புவியியல் காரணிகளாக,

*சராசரியாக 1700km நீளம் கொண்ட கரையோரம்

*ஏரிகள் உதாரணமாக [வல்வெட்டித்துறை ,மன்னார் ஏரி,உப்பு வெளி ஏரி]

*குடாக்கள் [மன்னார் குடா ,புத்தளம்]

*களப்புக்கள் மற்றும் சிறிய தீவுகள்

*பித்ரு ,வோர்ஜ்,மன்னார் ஆகிய கண்ட மேடைகள்

*கரையிலிருந்து 200கடல் மைல் தூரம் வரையிலான 517000சதுர km பிரத்தியேக பொருளாதார வலயத்தை கொண்டது.

*வடகீழ்,தெனாமேல் பருவகாற்று மற்றும் நீரோட்டங்களின் செல்வாக்கு

*கரையோரங்களில் மீன்பிடித்துறைமுகம்,படகு கட்டும் ஆலைகள்,ஐஸ் உற்பத்தி நிலையம் போன்ற உட்கட்டுமான வசதி கொண்டது.

*நவீன மீன்பிடி முறைகள் வளர்ச்சியடைந்தமை.

உதாரணமாக நவீன Gps முறை பயன்பாடு,Fishing sonar,போட்டு மீன்பிடி

*துறை சார்ந்த நிறுவனம் உருவாக்கப்பட்டுள்ளமை.உதாரணமாக நாரா ,நக்டா,மீபா,கடற்றொழில் கூட்டுத்தாபனம்

*போதிய சந்தை வாய்ப்பு காணப்படுகின்றமை

இவ்வாறான சாதக காரணிகளை கொண்டு பிரதானமாக

1.கரையோர மீன்பிடி
2.ஆழ்கடல் மீன்பிடி
3.நன்னீர் மீன்பிடி

ஆகிய மீன்பிடி முறைகள் இலங்கையில் இடம்பெற்று வருகின்றன. எவ்வாறாயினும் இலங்கை மீன்பிடி பல பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றது.அவற்றில் காலநிலை மாற்றம் மற்றும் கடல் கொந்தளிப்புகள் உதாரணமாக 2021ம் ஆண்டு மே மாதம் யாஸ் புயலால் மன்னார்,முல் லைத்தீவு,கிளிநொச்சி,திருகோணமலை மாவட்டங்கள் பாதிக்கப்பட்டன.

*கரையோர அரிப்பு உதாரணமாக மன்னார் அலைப்பிட்டி பகுதி

*இரசாயன மற்றும் நச்சுப்பொருள் கடலில் கலத்தல்உதாரணமாக 2021ம் ஆண்டு xpress pearl கப்பல் மூழ்கி எண்ணெய் கசிவு ஏற்பட்டது.இதன் போது அதிக எண்ணிக்கையிலான மீன்கள் இறந்தன.

*தவறான மீன்பிடி முறைமை உதாரணமாக டைனமைட் ,தங்கூசி வலைகளின் பயன்பாடு,இழுவை மடி,சுருக்கு மடி,ஒளிபாய்ச்சி மீன்பிடித்தல்.திருகோணமலை ,மட்டக்களப்பு பகுதியில் வெடிகுண்டு பயன்படுத்தி மீன் பிடிக்கின்றனர்.

*கழிவு நீர் நீருடன் கலத்தல் உதாரணமாக யாழ் போதான வைத்தியசாலை கழிவானது பண்ணைக்கடலில் இணைகிறது.

*வெளிநாட்டு மீனவர்களின் அத்து மீறல் உதாரணமாக இந்திய மீனவர்களின் அத்து மீறல்

இலங்கை இந்திய மீனவர் பிரச்சினை தொடர்பாக இன்றுவரையும் பேச்சுவார்த்தை இடம்பெற்று வருகிறது.2025ம் ஆண்டு March 26ம் திகதி வவுனியாவில் பேச்சு வார்த்தை இடம்பெற்றது.இதில் இழுவை வலைகளை படிப்படியாக குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

இந்திய மீனவர்கள் இலங்கையின் ஆழ்கடல் பகுதியில் சட்ட விரோதமான இழுவை படகுகளை பயன்படுத்தி இலங்கை கடறபரப்பை சேதமடையச் செய்கின்றனர்.இழுவைப்படகு என்ற முறை இலங்கையில் அனுமதிக்கப்படாத ஒரு முறைமை இதனால் மீன் இனப் பெருக்கம்,கடற்பரப்பு,கட்டமைப்பு பாதிக்கப்படுகின்றது.

மார்ச் 6,2025ம் ஆண்டு மன்னார் வளைகுடா அருகே மீன்பிடித்தாக 32 மீனவர்கள் கைது செய்யப்பட்டனர்.

அண்மைக்காலங்களில் கச்சதீவு பிரச்சனை இந்திய அரசுகளால் பேசப்பட்டு வருகிறது.1974ம் ஆண்டு இந்திய பிரதமர் இந்திரா காந்தி மற்றும் இலங்கை பிரதமர் ஶ்ரீமாவோ பண்டாரநாயக்க இடையே ஒப்பந்தம் செய்யப்பட்டு கச்சதீவு இலங்கைக்கு உரித்தானது என அறிவிக்கப்பட்டது. இந்திய மீனவர்களுக்கு செயின்ட் அந்தோனியார் தேவாலயத்தில் திருவிழாவில் பங்கேற்கவும் ஒய்வெடுக்கவும் அனுமதிக்கப்பட்டது. ஆனால் மீன்பிடிக்க அனுமதி வழங்கப்படவில்லை.1976ம் ஆண்டு மீண்டும் இரு நாடுகளும் ஒப்பந்தம் செய்யப்பட்டு இந்திய மீனவர்கள் மீன்பிடிக்க தடை விதிக்கப்பட்டது.

இன்றும் இப்பிரச்சினை தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன.தமிழ்நாடு அரசு கச்சத்தீவை இந்தியாவுக்கு திருப்பி தர வேண்டுமாறு கோரிக்கை வைக்கின்றன.இப்பிரச்சினைக்கு இன்றும் எமது நாடு முகங்கொடுத்து வருகிறது.

எமது நாடு கடல் வளங்களை பாதுகாக்க நீலப்பசுமை பொருளாதாரம் என்ற எண்ணக்கரு தொடர்பில் பல செயற்பாடுகள் முன்னெடுத்து வருகின்றது.2018 ம் ஆண்டிற்கான தேசிய வரவு செலவு திட்டத்தை “நீல பசுமை வரவு- செலவு திட்டம்" என வரையறுத்து முக்கிய முன்மொழிவுகளை மேற்கொண்டு செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தியது. இவ்வாறாக பல செயற்பாடுகளை முன்னெடுப்பதுடன் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியில் மீன்பிடி தொடர்பான சட்டம்,கொள்கையாக்கம்,கடல் சட்டம்,நிர்வாக கட்டமைப்பு நடவடிக்கை,கடல் பாதுகாப்பு,கடல் ஆய்வு போன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது .



அறிவியல் மற்றும் ஆன்மீகத்தின் அரிய சங்கமம்

# இரத்த நிலவு சந்திரகிரகணம்



மு.நிமியா,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

வானில் அவ்வப்போது நிகழும் அதிசய நிகழ்வுகளில் ஒன்றுதான் சந்திர கிரகணம். வானில் சூரியனை பூமி சுற்றி வரும் , பூமியை சந்திரன் சுற்றி வரும். வருடத்தில் ஓரிருமுறை மட்டும் இந்த மூன்றும் ஒரே நேர்கோட்டில் பயணிக்கும். சூரியன், பூமி, சந்திரன் ஆகிய மூன்றும் ஒரே நேர்க்கோட்டில் வரும்போது, பூமியின் நிழல் சந்திரன் மீது விழுந்து, அதன் ஒளியைத் தற்காலிகமாக மறைக்கும் நிகழ்வு சந்திர கிரகணம் ஏற்படும். இதன் போது சந்திரனின் பாதி பகுதியோ அல்லது சிறிய அளவு அல்லது முழு பகுதியும் மறைக்கப்படலாம்.

நேற்று ஏற்பட்டஇரத்த நிலவு' (டீடழழன ஆழழn) முழு நிலவு சந்திர கிரகணமாகும் . சந்திர கிரகணத்தின்போது சந்திரன் சிவப்பு நிறத்தில்

தோன்றியதால் ‘இரத்த நிலவு' (டீடழழன ஆழழn) என்று அழைக்கப்படுகிறது. செப்டம்பர் 7, 2025 நேற்றைய தினம் ஆரம்பித்த முழு சந்திர கிரகணம், இந்த ஆண்டின் கடைசி மற்றும் அரிதான இரத்த நிலவு நிகழ்வாகும். இந்த அரிய நிகழ்வு, அறிவியல் ரீதியாக எவ்வாறு விளக்கப்படுகிறது, ஆன்மீக மற்றும் கலாசார ரீதியாக பார்க்கப்படுகிறது,

அறிவியல் கண்ணோட்டம்: இரத்த நிலவு ஏன் சிவப்பு நிறத்தில் தெரிகிறது?

இரத்த நிலவு என்பது ஒரு முழு சந்திர கிரகணத்தின் போது நிகழ்ந்த ஒரு இயற்கையான வானியல் நிகழ்வு. கிரகணத்தின் போது, சந்திரன் முழுவதுமாக பூமியின் நிழலுக்குள் நுழைகிறது. அப்போது சூரிய ஒளியின் நேரடிப் பார்வை சந்திரனுக்குக் கிடைப்பதில்லை. அதனை புவி மறைத்துவிடும். எனினும், சூரியனில் இருந்து வரும் ஒளிக்கதிர்கள் முழுமையாகத் தடுக்கப்படுவதில்லை. பூமியின் வளிமண்டலம் ஒரு பெரிய வில்லை (டநளெ) போலச் செயல்பட்டு, ஒளியைக் குவித்து, அதை சந்திரனின் மீது செலுத்துகிறது.

இந்த ஒளியானது பூமியின் வளிமண்டலத்தின் வழியே

பயணிக்கும்போது, ஒரு குறிப்பிட்ட செயல்முறை நிகழ்கிறது. ஒளியில் உள்ள பல்வேறு வண்ண அலைநீளங்களில், நீல நிற ஒளி அலைநீளங்கள் ரெய்லே சிதறல் (சுயலடநiபா ளுஉயவவநசiபெ) என்ற நிகழ்வு காரணமாக வளிமண்டலத்தில் அதிக அளவில் சிதறடிக்கப்படுகின்றன. வானம் நீல நிறத்தில் தெரிவதற்குக் காரணமும் இதுவே. ஆனால், சிவப்பு மற்றும் ஆரஞ்சு நிற அலைநீளங்கள் குறைவான சிதறல் அடைவதால், அவை வளிமண்டலத்தைத் தாண்டிச் சென்று பூமியின் நிழல் வழியாகப் பயணித்து சந்திரனின் மீது விழுகின்றன. இதன் விளைவாக, நிலவு பழுப்பு, செம்பு அல்லது அடர் சிவப்பு நிறத்தில் காட்சியளிக்கிறது. இந்த நிகழ்வுதான் ‘இரத்த நிலவு' என அறிவியல் பூர்வமாக அழைக்கப்படுகிறது.

இந்த ஒளியின் நிறமும் அதன் அடர்த்தியும் பூமியின் வளிமண்டலத்தில் உள்ள தூசி, மேகங்கள் மற்றும் பிற துகள்களின் அளவைப் பொறுத்து மாறுபடும்.

இந்த முழு சந்திர கிரகணத்தின் அறிவியல் தகவல்களை

ஆர்தர் சி. கிளார்க் நவீன தொழில்நுட்ப நிறுவனத்தின் தலைவர் மற்றும் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் இயற்பியல் துறையின் பேராசிரியர் சந்தன ஜெயரத்ன உறுதிப்படுத்தியுள்ளார். அவருடைய கூற்றுப்படி, இந்த முழு சந்திர கிரகணம் இந்திய மற்றும் இலங்கை நேரப்படி இரவு 8:58 மணிக்குத் தொடங்கி அதிகாலை 2:25 மணிக்கு முடிவடைகிறது. இதில், முழு கிரகணத்தின் காலகட்டம் இரவு 11:01 முதல் நள்ளிரவு 12:22 வரை இருக்கும், அப்போது சந்திரன் மிகவும் தெளிவாகவும், அடர் சிவப்பு நிறத்திலும் காணப்படும். இது சுமார் 82 நிமிடங்கள் நீடிக்கும் ஒரு நீண்ட கிரகணமாகும். இந்த நிகழ்வு ஆசியா, ஐரோப்பா, ஆஸ்திரேலியா மற்றும் ஆப்பிரிக்காவின் பெரும்பாலான பகுதிகளில் தெளிவாகத் தெரியும் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் கிரகணம் தென்பட்ட முக்கிய நேரங்கள் வருமாறு,

கிரகணம் தொடங்குகியது இரவு 8:58 மணிக்காகும்,

பகுதி கிரகணம் தொடங்குகியது இரவு 9:57 மணிக்காகும். முழு கிரகண ஆரம்பம் இரவு 11:01 மணிக்கு மற்றும் அதிகபட்ச கிரகணம் இரவு 11:42 மணிக்கும் காணகிடைத்து.முழு கிரகணம் அதிகாலை 12:22 மணி (செப்டம்பர் 8) முடிவடைந்தது.

பகுதி கிரகணம் அதிகாலை 1:26 மணி (செப்டம்பர் 8) முடிவடைந்தது.

முழுமையான கிரகணம்அதிகாலை 2:25 மணி (செப்டம்பர் 8) முடிவடைந்தது.

ஆன்மீகமும் நம்பிக்கைகளும்: புராணக் கதைகள் மற்றும் சடங்குகள்

அறிவியல் விளக்கம் ஒருபுறம் இருந்தாலும், சந்திர கிரகணம் பல நூற்றாண்டுகளாக மக்களின் ஆன்மிக மற்றும் கலாசார நம்பிக்கைகளுடன் பின்னிப் பிணைந்துள்ளது. இந்து மத புராணங்களில், கிரகணங்கள் ராகு மற்றும் கேது என்ற நிழல் கிரகங்களால் ஏற்படுகின்றன என்று நம்பப்படுகிறது. தேவலோகத்தில் பாற்கடலைக் கடைந்தபோது, அமிர்தம் வெளிப்பட்டதாகவும், அதை அசுரர்களும் தேவர்களும்

பங்குபோட்டுக் கொண்டதாகவும் ஒரு கதை உண்டு. அப்போது, ‘ஸ்வர்பானு' என்ற அசுரன் ஒரு தேவதையைப் போல வேடமிட்டு அமிர்தத்தை அருந்தினான். இந்த சூழ்ச்சியைக் கண்ட சூரியனும் சந்திரனும் இதை மகாவிஷ்ணுவிடம் கூறினர். கோபமடைந்த விஷ்ணு, தனது சக்கரத்தால் ஸ்வர்பானுவின் தலையை வெட்டினார். அமிர்தம் அருந்தியதால் அவனது தலையும் முண்டமும் சாகாத தன்மை பெற்றன. தலை ராகு என்றும், உடல் கேது என்றும் அழைக்கப்பட்டன. அவர்கள் தங்களைப் பற்றிக் காட்டி கொடுத்த சூரியனையும் சந்திரனையும் பழிவாங்க, அவ்வப்போது அவர்களை விழுங்குவதாகப் புராணங்கள் கூறுகின்றன. இந்த நிகழ்வே சூரிய, சந்திர கிரகணங்களாகக் கருதப்படுகின்றன.

இந்த நம்பிக்கையின் காரணமாக, கிரகணக் காலம் ஒரு அசுபமான நேரமாகக் கருதப்படுகிறது. அந்தக் காலத்தில் சில சடங்குகளும் பழக்கவழக்கங்களும் பின்பற்றப்படுகின்றன. உதாரணமாக:

ூ உணவு உண்ணுதல் தவிர்த்தல்: கிரகண காலத்தில் உணவு சமைப்பதோ, உண்பதோ தவிர்க்கப்பட வேண்டும் என்று கூறப்படுகிறது. கிரகணக் கதிர்வீச்சு உணவை மாசுபடுத்தும் என்ற நம்பிக்கை இதற்குப் பின்னால் உள்ளது. கிரகணத்திற்கு முன்பு சமைத்த உணவுப் பொருட்களில் அறுகம்புல் அல்லது துளசி இலைகளைப் போட்டு வைக்கும் பழக்கமும் உண்டு.

ூ கோயில்கள் நடை சாத்துதல்: பெரும்பாலான இந்து ஆலயங்கள் கிரகண நேரத்தில் பக்தர்களுக்காக மூடப்படுகின்றன. இது தீய சக்திகளின் தாக்கம் அதிகம் இருக்கும் என்ற நம்பிக்கையால் பின்பற்றப்படுகிறது.

ூ கர்ப்பிணிப் பெண்கள் வெளியே வராதது: கர்ப்பிணிப் பெண்கள் கிரகணத்தின்போது வெளியே வரக்கூடாது என்று பரவலாக நம்பப்படுகிறது. இது கருவில் உள்ள குழந்தையைப் பாதிக்கும் என்ற அச்சத்தின் காரணமாகப் பின்பற்றப்படுகிறது.

கிரகணம் முடிந்ததும், குளித்துவிட்டு, வீடு மற்றும் சுற்றுப்புறத்தைத் தூய்மைப்படுத்துவது ஒரு முக்கியமான சடங்கு. இதன் மூலம் கிரகணத்தின் தீய விளைவுகள் நீங்கும் என்று நம்பப்படுகிறது.

வரலாற்றுச் சிறப்பு மற்றும் பொதுப் பார்வை

சந்திர கிரகணம் என்பது வெறும் ஒரு வானியல் நிகழ்வு மட்டுமல்ல, அது பல நூற்றாண்டுகளாக மனித குலத்தின் வரலாற்றில் ஒரு முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது. பண்டைய காலத்தில், இது ஒரு அச்சுறுத்தலான நிகழ்வாகக்

கருதப்பட்டது. ஆனால், அறிவியல் வளர்ச்சியால் அதன் உண்மையான காரணம் அறியப்பட்ட பின்னர், இது ஒரு கண்கவர் காட்சியாகவும், வானியல் ஆய்வாளர்களுக்கு ஒரு அரிய வாய்ப்பாகவும் பார்க்கப்படுகிறது.

இந்த முழு சந்திர கிரகணத்தை வெறும் கண்களால் பார்ப்பது முற்றிலும் பாதுகாப்பானது. தொலைநோக்கி அல்லது பைனாகுலர் பயன்படுத்தினால், நிலவின் சிவப்பு நிறத்தை இன்னும் தெளிவாகக் காணலாம். கொழும்புப் பல்கலைக்கழகம் போன்ற பல கல்வி நிறுவனங்கள் இந்த நிகழ்வை மக்கள் கண்டு ரசிப்பதற்காக சிறப்பு ஏற்பாடுகளைச் செய்திருந்தன.

வானம் தெளிவின்மையால் நாட்டின் ஒரு சில இடங்களில் இந்த இரத்த நிலவை முழுமையாகக் காண முடியாமல் போனது.

இந்த கிரகணம் இந்த ஆண்டின் கடைசி முழு சந்திர கிரகணம் என்பதும், அடுத்த முழு சந்திர கிரகணம் டிசம்பர் 2028-ல் தான் நிகழும் என்பதும் இந்த நிகழ்வின் முக்கியத்துவத்தை மேலும் அதிகரித்தது. இது வானியல் ஆர்வலர்களுக்கு மட்டுமின்றி, அனைவருக்கும் ஒரு மறக்க முடியாத அனுபவம்

‘நிலா நிலா ஓடி வா நில்லாமல் ஓடி வா....'என்று நேற்றைய நாள் முழுவதும் உலக மக்களின் கவனத்தை இரத்த நிலவு சந்திர கிரகணம் ஈர்த்தது.

கர்ப்பிணிப் பெண்களை கவனமாக இருக்க சொல்லுவதும், சாப்பாட்டு நேரத்திற்கு முன் சாப்பிடுவதும், சாப்பாட்டில் அறுகம்புல் போடுவதும் என நேற்றைய நாளில் இலங்கை மக்களையும் மிகவும் பரபரப்புடன் வைத்திருந்தது இரத்த நிலவு' (டீடழழன ஆழழn)சந்திர கிரகணம்.சிலர் ரத்த நிறத்தில் சந்திர கிரகணமா என பயந்து தயங்கி வெளியில் வராமல் இருந்தனர். பலர் காணக் கிடைக்காத அரிய வாய்ப்பு என ஆர்வத்துடன் வெளியில் வந்து நிலவை இரசித்தனர்.

இரத்த நிலவு என்பது அறிவியல் மற்றும் ஆன்மிகம் என இரு வேறுபட்ட உலகங்களை இணைக்கும் ஒரு தனித்துவமான நிகழ்வு.

மும்பை

விமான நிலையத்தில் அதிகாரிகள்

# 15 பேர் பணிநீக்கம்

மும்பை சர்வதேச விமான நிலையத்தில் பயணிகளிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களை சொந்த உபயோகத்திற்கு திருடிய 15 விமான நிலைய மூத்த அதிகாரிகள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

வர்த்தக நகரமான மும்பையில் உள்ள சர்வதேச விமான நிலையம் எப்போதும் பரபரப்பு காணப்படும் பாதுகாப்பு நடவடிக்கையாக எண்ணெய் பாட்டில்கள், தேங்காய்கள்,மிளகாய் பொடி பாக்கெட்டுகள், பொம்மைகள், சிகரெட் லைட்டர்கள் உள்ளிட்ட தடை செய்யப்பட்ட பொருட்களை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.
அவை அனைத்தையும் அழிப்பதற்காக அங்குள்ள அறைகளில் இருப்பு வைக்கப்பட்டு இருந்தன. இந்த



பொருட்களை விமான நிலைய மூத்த அதிகாரிகள் பலர் தங்கள் சொந்த உபயோகங்களுக்கு திருடிச் சென்றிருக்கின்றனர். அங்குள்ள சிசிடிவி காட்சிகளை பார்வையிட்ட போது இந்த நூதன திருட்டைக் கண்டுபிடித்த மேலதிகாரிகள், இதில் ஈடுபட்ட 15 பேரை பணிநீக்கம் செய்துள்ளனர்.

சேலம்

# இலங்கை இலவங்கத்தை இனி வாங்கமாட்டோம்


### சேலம் வணிகர்கள் அதிரடி முடிவு

இலங்கை அரசு தமிழக மீனவர்களின் படகுகளை சேதப்படுத்தி துன்புறுத்தினால் இலங்கையில் இருந்து வரும் இலவங்கம் உள்ளிட்ட எவ்வித பொருட்களையும் வாங்க மாட்டோம் என வர்த்தக நல சங்க கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சேலம் செவ்வாய்பேட்டை மளிகை வர்த்தக நல சங்கத்தின் 101 ஆவது பொதுக்குழு கூட்டம் திங்கட்கிழமை (08) நடைபெற்றது. கூட்டத்துக்கு சங்கத்தின் தலைவர் S.C.நடராஜன் தலைமை தாங்கினார்,
பொதுக்குழு கூட்டத்தில், சங்கத்தின் செயலாளர் தர்மலிங்கம் ஆண்டறிக்கை வாசித்தார்.

இந்த கூட்டத்தில் பல்வேறு





தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தீர்மானம் குறித்து சங்கத்தின் தலைவர் நடராஜன் கூறுகையில், இலங்கை அரசு தமிழக மீனவர்களின் 30 படகுகளை அடித்து உடைத்து சேதப்படுத்தியுள்ளது. இதுபோன்ற சம்பவங்கள் தொடரும் பட்சத்தில், இலங்கையிலிருந்து இலவங்கம் உள்ளிட்ட பொருட்களை வாங்க மாட்டோம் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

உத்தரபிரதேசம்

# சிறுமி மர்ம மரணம்: அந்த உறுப்பு மாயம்

13 வயது சிறுமியின் படுகொலை செய்யப்பட்ட உடல் கரும்பு வயலில் கண்டெடுக்கப்பட்டது. இந்த சம்பவம் உத்தரபிரதேசத்தின் லகிம்பூர் கேரி மாவட்டத்தில் உள்ள ஒரு கிராமத்தில் இடம்பெற்றுள்ளது.

அவர் பயங்கரமாக சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது. ஆதாரங்களின்படி, பாடசாலையிலிருந்து வீடு திரும்பும்போது சிறுமி மாயமானார்.

அவரது பெற்றோர், இரவு வரை அவர் வீடு திரும்பவில்லை என பொலிஸாரிடம் தெரிவித்தனர், ஆனால் பொலிஸார் அப்போது புகாரைப் பதிவு செய்யவில்லை. மறுநாள் காலை, கிராமவாசிகள் சிறுமியின் உடலை மிகவும் சிதைந்த நிலையில் கண்டெடுத்து பொலிஸாருக்கு தகவல் கொடுத்தனர். சிறுமியின் கண்கள் நோண்டி எடுக்கப்பட்டிருந்ததாகவும் அவர்கள் தெரிவித்தனர்.பின்னர், பொலிஸார் சம்பவ இடத்திற்கு வந்து உடலை மீட்டு, பிரேத பரிசோதனைக்கு அனுப்பி, புகாரைப் பதிவு செய்தனர்.

நேபாளம்

ஜென் Z போராட்டம் எதிரொலி:

# பின்வாங்கியது நேபாளம்

பேஸ்புக், யூ டியூப், எக்ஸ் உள்ளிட்ட சமூக வலைதளங்களுக்கு நேபாள அரசு திடீர் தடை விதித்ததை எதிர்த்து திங்கட்கிழமை (08) நடைபெற்ற வன்முறையில் 19 பேர் உயிரிழந்தனர். 200 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இதனையடுத்து இந்த தடை உத்தரவை நேபாள அரசு வாபஸ் பெற்றுள்ளது.

பேஸ்புக், யூ டியூப், எக்ஸ் உள்ளிட்ட பதிவு செய்யப்படாத 26 சமூக வலைதளங்களை நேபாள அரசு முடக்கியது. இதனால், கடந்த வெள்ளிக்கிழமையிலிருந்து (05) அவற்றை பயன்படுத்த முடியாமல் இளைஞர்கள் தவித்து வந்தனர்

இதையடுத்து சமூக வலைதளங்கள் மீதான தடையை விலக்க கோரியும், நாட்டில் பரவியுள்ள ஊழல் கலாச்சாரத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கக் கோரியும் திங்கட்கிழமை (08) ஆயிரக்கணக்கான இளைஞர்கள் ஒன்று திரண்டு தலைநகர் காத்மாண்டுவில் பேரணி நடத்தினர். அப்போது நியூ பனேஷ்வரில் பாராளுமன்றத்துக்கு வெளியே போடப்பட்டிருந்த தடுப்புகளை தாண்டி போராட்டக்காரர்கள் உள்ளே



நுழைய முயன்றனர். நேபாள பிரதமர் சர்மா ஒலி வீட்டின் மீது கற்களை வீசி எறிந்தும் தாக்குதல் நடத்தினர்.

இதையடுத்து,போராட்டக்காரர்களுக்கும் பாதுகாப்பு படையினருக்கும் இடையே மோதல் மூண்டது.பாதுகாப்பு படையினர் கண்ணீர் புகை குண்டுகளை வீசியும், ரப்பர் தோட்டாக்களால் சுட்டும், தண்ணீரை பீய்ச்சியடித்தும் போராட்டக்காரர்களை கலைக்க முயன்றனர். இந்த கடும் மோதலில் 19 பேர் உயிரிழந்தனர். 200-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இந்த நிலையில் சமூக ஊடகங்கள் மீது விதிக்கப்பட்ட தடையை நேபாள அரசு வாபஸ் பெற்றுள்ளது. இதனை அந்நாட்டு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் பிரித்வி சுப்பா உறுதி அறிவித்துள்ளார்.

மெக்சிகோ

டெக்கர் பஸ் மீது சரக்கு ரயில் மோதல்

# 10 பேர் பலி;61 பேர் காயம்

மெக்சிகோவில் டபுள்-டெக்கர் பஸ் மீது சரக்கு ரயில் மோதியதில் 10 பேர் பலியாகினர், மேலும் 60க்கும் மேற்பட்டோர் காயமடைந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

மெக்சிகோ நாட்டின் மிச்சோகன் மாகாணத்தில் உள்ள மரவடியோ நகரில் இருந்து மெக்சிகோ சிட்டி நோக்கி 70க்கும் மேற்பட்டோருடன் டபுள் டெக்கர் பேருந்து சென்று கொண்டு இருந்தது.



அப்போது மெக்சிகோ சிட்டியின் வடமேற்கே உள்ள அட்லகோமுல்கோ நகரில் இன்று அதிகாலை ரயில் தண்டவாளத்தை பேருந்து கடக்க முயன்ற போது, அவ்வழியாக வந்த சரக்கு ரயில் மோதியது.

ஆசியக் கிண்ணம்: இந்திய அணியில்

# சாம்சனைப் பிரதியிடும் கில், ஜிதேஷ்?

ஆசியக் கிண்ணத் தொடரின் இந்திய அணியில் ஆரம்பத் துடுப்பாட்டவீரராக சஞ்சு சாம்சனை ஷுப்மன் கில் பிரதியிடுவதோடு, விக்கெட் காப்பாளராக சாம்சனை ஜிதேஷ் ஷர்மா பிரதியிடுவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

இதுவரையில் மூன்று வலைப்பயிற்சிகளை ஐக்கிய அரபு அமீரகத்தின் டுபாயில் இந்தியா மேற்கொண்ட நிலையில், ஒவ்வொன்றிலும் இறுதியாகவே சாம்சன் துடுப்பாட்டப் பயிற்சியை மேற்கொண்டதுடன், ஐந்து நிமிடங்கள் அளவிலேயே விக்கெட் காப்புப் பயிற்சியில் ஈடுபட்டிருந்தார்.

மறுபக்கமான சர்வதேச கிரிக்கெட் சபையின் சம்பியன்ஸ் கிண்ணத் தொடரின்போது டுபாய் சுழற்பந்துவீச்சுக்கு ஒத்துழைத்த நிலையில், மொஹமட் ஷமியோடு, சகலதுறைவீரராக ஹர்திக் பாண்டியாவுடன் இரவீந்திர ஜடேஜா, வருண் சக்கரவர்த்தி, குல்தீப் யாதவ், அக்ஸர் பட்டேல் விளையாடியிருந்தனர்.

இந்நிலையில் தற்போது டுபாய் ஆடுகளமானது பச்சையாகக்



காணப்படுவதுடன், இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டிகளிலிருந்து ஜடேஜா ஓய்வு பெற்றுள்ள நிலையில் எட்டாமிடத்தில் அர்ஷ்டீப் சிங் அல்லது ஹர்ஷித் ரானாவை விளையாட வைப்பதா அல்லது ஷிவம் டுபேயைக் கொண்டு வந்து துடுப்பாட்டத்தைப் பலப்படுத்துவதாதென்பது சிக்கலுக்குரியதாகக் காணப்படுகின்றது.

இன்றிரவு 8 மணிக்கு நடைபெறவுள்ள முதலாவது குழு ஏ போட்டியில் ஐ.அ. அமீரகத்தை இந்தியா எதிர்கொள்கிறது.


ஐ. அமெரிக்க பகிரங்கத் தொடரில்

# முதலாமிடத்தில் அல்கரஸ்

ஐக்கிய அமெரிக்க பகிரங்க டென்னிஸ் தொடரில் முதல்நிலை வீரராகவிருந்த ஜனிக் சின்னரை வீழ்த்தி சம்பியனானதையடுத்து முதலாமிடத்துக்கு ஸ்பெய்னின் கார்லோஸ் அல்கரஸ் முன்னேறியுள்ளார்.

இரண்டாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி முதலாமிடத்தை திங்கட்கிழமை (08) தரப்படுத்தல் இற்றைப்படுத்தலில் அல்கரஸ் அடைந்துள்ளார். இத்தாலியின் சின்னர் முதலாமிடத்திலிருந்து ஓரிடம் கீழிறங்கி இரண்டாமிடத்தில் காணப்படுகின்றார்.

இதேவேளை அரையிறுதிப் போட்டி வரையில் ஐ. அமெரிக்க பகிரங்கத் தொடரில் முன்னேறிய சேர்பியாவின் நொவக் ஜோக்கோவிச்,



ஏழாமிடத்திலிருந்து மூன்று இடங்கள் முன்னேறி நான்காமிடத்தையடைந்துள்ளார்.

இந்நிலையில் ஐ. அமெரிக்க பகிரங்கத் தொடரில் இறுதிப் போட்டி வரை முன்னேறிய ஐ. அமெரிக்காவின் அமந்தா அனிசிமோவா, ஒன்பதாமிடத்திலிருந்து ஐந்து இடங்கள் முன்னேறி பெண்களுக்கான தனிநபர் தரவரிசையில் நான்காமிடத்தையடைந்துள்ளார்.



இன்று ஆரம்பிக்கிறது இருபதுக்கு – 20 தொடர்:

# இங்கிலாந்தை வீழ்த்துமா தென்னாபிரிக்கா?

இங்கிலாந்து, தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டித் தொடரானது, கார்டிப்பில் இன்றிரவு 11 மணிக்கு நடைபெறவுள்ள முதலாவது போட்டியுடன் ஆரம்பிக்கின்றது.

சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு - 20 உலகக் கிண்ணத் தொடரானது அடுத்தாண்டு ஆரம்பத்தில் நடைபெறவுள்ள நிலையில், இத்தொடரின் மூன்று போட்டிகளும் இரண்டு அணிகளும் எவ்வாறு பயணிக்க வேண்டுமென்பதை வெளிக்காட்டுமென நம்பப்படுகின்றது.

இங்கிலாந்தைப் பொறுத்த வரையில் ஹன்ட்ரட் தொடரில் பிரகாசித்த றெஹான் அஹ்மட்டைச் சோதித்துப் பார்ப்பதற்கான வாய்ப்பாக இத்தொடர் காணப்படுகின்றது. பென் டக்கெட்டுக்கு ஓய்வளிக்கப்பட்ட நிலையில் ஜேமி ஸ்மித்துடன் பில் ஸோல்ட் ஆரம்பத் துடுப்பாட்டவீரராகக் களமிறங்க வில் ஜக்ஸ் பின்னுக்கே வருவாரென எதிர்பார்க்கப்படுவதோடு, டொம் பன்டனுக்கான வாய்ப்புகள் மட்டுப்படுத்தப்பட்டதாகவே காணப்படுகின்றது. தவிர சிறப்பான போர்மில் உள்ள சாம் கர்ரனின் இணைப்பு இங்கிலாந்துக்கு பலத்தை வழங்கும்.

மறுபக்கமாக டேவிட் மில்லர், மார்கோ ஜன்சனின் மீள்வருகை தென்னாபிரிக்காவுக்கு பலத்தை வழங்குவதுடன், கேஷவ் மஹராஜ்ஜிடமிருந்து என்ன எதிர்பார்க்கலாமென்பதும் இத்தொடர் முடிவில் தெளிவாகலாம். டெவால்ட் பிறெவிஸ், லுஹான்-ட்ரீ பிறிட்டோறியஸ் இருக்கின்ற நிலையில் டொனோவன் பெறைராவுக்கான வாய்ப்புகள் சந்தேகத்துக்கிடமானதாகவே காணப்படுகின்றது.




உலகக் கிண்ண முடிவு:

# ‘மெஸ்ஸி நேரத்தை எடுத்துக் கொள்வார்’

சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தின் 2026 உலகக் கிண்ணத் தொடரில் ஆர்ஜென்டீனாவின் லியனல் மெஸ்ஸி விளையாட மாட்டார் என்ற நிச்சயமற்றதன்மை அதிகரித்து வருகின்ற நிலையில், ஆர்ஜென்டீனாவின் அணித்தலைவர் மெஸ்ஸி இறுதி முடிவொன்றை எடுக்க முன்னர் அமைதியாக நேரத்தை எடுத்துக் கொள்வாரென அந்நாட்டின் முகாமையாளர் லியனல் ஸ்கலோனி தெரிவித்துள்ளார்.

ஆர்ஜென்டீனாவில் தனது இறுதிப் போட்டியை வெனிசுவேலாவுக்கெதிரான தென்னமெரிக்க கால்பந்தாட்டச் சம்மேளனங்களின் கூட்டமைப்பின் உலகக் கிண்ண தகுதிகாண் போட்டியில் விளையாடிய 38 வயதான மெஸ்ஸி, போட்டிக்கு பின்னர் உலகக் கிண்ணத்தில் தனது பங்கேற்பை உறுதியளிக்க மறுத்து விட்டார்.



உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிகள்:

# கொஸோவாவிடம் தோற்ற சுவீடன்

ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சர்வதேச கால்பந்தாட்டச் சம்மேளன உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிகளில், கொஸோவாவில் திங்கட்கிழமை (08) நடைபெற்ற அந்நாட்டுடனான போட்டியில் 0-2 என்ற கோல் கணக்கில் சுவீடன் தோற்றது.

கொஸோவா சார்பாக எல்விஸ் றெஜ்பேஜ்ஜாய், வெடட் முரிக்கி ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இதேவேளை ஹங்கேரியில் நடைபெற்ற இஸ்ரேலுடனான போட்டியில் 5-4 என்ற கோல் கணக்கில் இறுதி நேரத்தில் இத்தாலி வென்றது. இத்தாலி சார்பாக மொய்ஸே கீன் இரண்டு கோல்களையும், மட்டியோ பொலிட்டானோ, ஜியகொமோ றஸ்படோரி, சன்ட்ரோ டொனாலி ஆகியோர் தலா ஒவ்வொரு கோலையும் பெற்றனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 10, செப்டெம்பர் 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.